பதிவு எண் M. 4900. 16 பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 30-4-1949 சனிக்கிழமை } மலர் 34.

# குறள் பற்றிப் பெரியார்!

★

குறள் என்பது மற்ற நூல்களைப் போலவே அதாவது ஆரிய மத இதிகாச நூல்களைப் போலவே, எல்லாத் தமிழ் (இந்து) மக்களாலும் இதுவரையில் மதிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆரிய நூல்களைப் போன்றே குறளுக்கும், ஆரிய மத இதிகாசக் கற்பனைகள்—ஆரியத் தத்துவங்கள் முதலியனவற்றை, ஆதாரமாக—மேற்கோளாகக் கொண்டு பல உரைகளைச் செய்து, மக்களிடையேயும் அத்தன்மையிலேயே அது பரப்பப்பட்டு வந்திருக்கின்றது.

## சைவர் வைணவரின் குறள் பிரச்சாரம்!

பெரிய பெரிய சைவ அன்பர்கள், வைணவ அன்பர்கள் எனப்படுவோர் முதல், பார்ப்பனப்பண்டிதர்கள் சங்கராச்சாரிகள் உள்பட எல்லோரும் குறளைப் பற்றியும் சிறிது சிறிது பிரசாரம் செய்கின்றனர். என்றாலும், அவர்கள் அத்தனை பேரும் குறளுக்கு நேர் விரோதமாக நடப்பவர்களாகவே இருக்கின்றனர். சங்கராச்சாரியார் கூட, குறளுக்கு உரை எழுதுகிறார்; இலவசமாய் வழங்கப் போகிறார் என்றால், இவர்கள் யாவரும் அவரவர்களுடைய கோட்பாடுகளுக்கு ஏற்ற முறையிலும், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் அவர்களுடைய ஆதிக்கத்திக்கு ஏற்ற முறையிலும், உரைகள்—அர்த்தங்கள் புகுத்துவதற்குமேயல்லாமல், குறளின் உண்மையான தத்துவத்தை அதாவது வள்ளுவரின் உள்ளத்தை மக்கள் அறிந்து, அதன் வழி நடந்து, நன்மக்களாய் வாழ்வதற்காக அல்ல. ஆரிய மத, சைவ—வைணவ மதக்காரர்களும், சைவ வைணவக் கடவுள்களையும், புராண இதிகாசங்களையும் ஏற்றுக் கொண்டு ஒழுகுபவர்கள் கூட குறளைப்படிக்கின்றார்கள், பிரச்சாரம் செய்கின்றார்கள் என்றால், அது அதிசயமேயாகும்.

## வியப்பும் திகைப்பும் ஏற்படத்தான் செய்யும்!

எனக்குக் குறளில் ருசியையுண்டாக்கியவர், நண்பர் காலஞ்சென்ற P. V. மாணிக்க நாயக்கரவர்கள் தான். அவர் என்னிடம் நகைச்சுவையாகப் பேசுவதற்குங்கூட குறளையே கையாளுவார். பார்ப்பனர்களை—ஆரியத்தைக் கிண்டல் செய்வதற்கும் அச்சமயங்களில், நானும் குறளைச் சிறிது உணர ஆரம்பித்தேன். அதுமட்டுமல்ல, அந்த நாளிலிருந்தே, நான் மற்ற ஆரியப் புராண இதிகாசங்களில்—சைவ வைணவங்களில் உள்ள குற்றங்குறைகளை எடுத்துக் கூறி வருவது போலக், குறளிலும் பல குற்றங்குறைகளைக் கூறி வந்துள்ளேன். நண்பர் மாணிக்க நாயக்கர் அவர்களிடமும், நான் அடிக்கடி குறை கூறித் தர்க்கிப்பதுண்டு. காரணம் அப்போது நான், குறளுக்கு ஆரியரும், ஆரிய உணர்ச்சியுள்ள மத வாதிகளும் செய்த உரைகளை, மெய்யென்று எண்ணியதே யாகும்.

ஆனால் இன்று சுயமரியாதைக்காரர்களாகிய திராவிடர் இயக்கத்தைச் சார்ந்தவர்களும், மற்ற திராவிட உணர்ச்சி உள்ள நண்பர்களும், சிறிதுகாலமாகக் குறளைப் பற்றி மக்களிடையே தீவிரப் பிரசாரம் செய்து வருவது குறித்து, சிலருக்கு ஆச்சரியமிருக்கக் கூடும். ஏனெனில், பொதுவாக இன்று நம் மத வாதிகளால்—சைவ வைணவர்களால் எது எது நீதி நூல், நெறி நூல், தெய்வ நூல், ஞான நூல் என்று கூறப்பட்டு வருகின்றனவோ, அவைகளை நாங்கள் பெரிதும் வெறுப்பவர்கள் என்பது மட்டுமல்லாமல் குறிப்பாக இராமாயணம், பாரதம் போன்ற இதிகாச புராணங்களை அடியோடு அழித்தொழித்தாலன்றி, மக்களுக்கு நல்வாழ்வும், நல்லொழுக்கமும், மான உணர்ச்சியும், பகுத்தறிவும் ஏற்படாது என்று கூறி; அதற்காகப் பாடுபட்டும் வருகிறவர்கள். அவ்வாறு பாடுபடக் கூடிய நானும், மற்றைய கழகத் தோழர்களும் திருக்குறளை மட்டும் பெரிதும் ஆதரிக்க முன்வந்திருக்கிறோமென்றால், இதுவரை எங்கள் மீது, அதாவது "எல்லா நீதி நூல்களையும் ஒழிக்கும் நாஸ்திகர்கள்" என்று எங்களைக் கூறி வந்தவர்களுக்கு சற்று வியப்பும், திகைப்பும் ஏற்பட்டுத்தான் தீரும்.

## கொந்தளிப்புக்குப்பின் தெளிவு!

ஆரிய நூல்களையும், அவர்களால் கற்பிக்கப்பட்ட நீதி நூல்கள் எனப்படுபவைகளையும் நம்மிடை

யே பரவாமல் ஒழிக்க வேண்டுமென்று நான் இதுவரை கூறிவந்த போது, "இவன் என்ன? இந்த ராமசாமி பெரிய நாத்தீகனாயிருக்கிறானே! எல்லாவற்றையும் ஒழித்து விட்டால் இதற்கு மாற்றுத்தான் என்ன? எதைத் தான் நாம் நீதி, நெறி நூலாக ஏற்பது?" என்று குறை கூறி வந்த சமயமெல்லாம், நான் வாய்ச் சாலக்காக, "நாறுகிறது அதை எடுத்து எறி என்றால், அதற்குப் பதிலாக வேறு எதை வைப்பது என்று கேட்பது பயித்தியக்காரத் தனமல்லவா? முதலில் நாறுகிறதை எடுத்து அப்புறப்படுத்துங்கள், பிறகு பார்க்கலாம்" எனக் கூறி வந்தேன். ஆனால் இந்த விதமாக எத்தனை நாட்களுக்கு நாம் சொல்லி வர முடியும்? அதுமட்டுமல்ல, நமது பிரசாரத்தால் பார்ப்பனர்களின் பித்தலாட்டங்கள் வெளியாக வெளியாக, மக்கள் அவர்களின் அமைப்பு முறையில் வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர். நமது எதிரிகள் நம்மைப்பற்றி இதற்குமுன் கூறி வந்த தவறான பொய்யுரைகளையும், இன்றைய மக்கள் அப்படியே நம்புவதுமில்லை. ஏதோ ஓரளவுக்காவது எதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்கிற நிலைக்கு, நமது பிரசாரம் மக்களைப் பண்படுத்தி விட்டது.

இவ்வாறு பார்ப்பனீயப் பித்தலாட்டத்திலிருந்தும், மூட நம்பிக்கையிலிருந்தும் விடுபட்டு, அப் பார்ப்பனர்களால் கற்பிக்கப்பட்டு வந்த வேத, இதிகாச, புராண, நீதி நூல்களிலுள்ள மடமைகளையும், சூழ்ச்சிகளையும் தெரிந்து, அவற்றையும் ஓரளவுக்கு உதறித் தள்ளியபிறகு, நம் மக்களுக்கு, வேறு ஒரு நல்ல நெறி, வாழ்க்கையின் வளப்பத்துக்கு மிக மிக அவசியமாகிவிட்டது இன்று.

பல்லாயிரக்கணக்கான கோயில்களும், கடவுள்களும், அதற்கான கட்டுக் கதைகளும், வைதீகக் கோலங்களும் மக்களின் நல் வாழ்வுக்கு ஒரு சிறிதாவது பயன்பட்டு வந்துள்ளதா? என்று சிந்திக்கும் நிலை, பழுத்த ஆஸ்தீகர்கள் என்பவர்களுக்குங்கூட ஏற்பட்டுவிட்ட காலம் இது.

எனவே, அவ்வாறு சிந்தித்து சிந்தித்துப் பின்னர் ஒரு முடிவுக்கு வரும்போது, மக்கள் ஒரு நல்ல நெறியை—நீதி நூலை எதிர்பார்ப்பது இயற்கையேயல்லவா?

## இன்று குறளைத்தவிர வேறு இல்லவே இல்லை. ஆனால்...?

இந்த இயற்கையை ஒட்டியே, அந்த இடத்திற்குக் குறளை வைக்குமாறு இப்போது நான் கூறுகிறேன். எல்லாத் துறைகளைப்பற்றியும் நல்வழிகாட்டக்கூடிய—அறிவு வழியைக் காட்டக்கூடிய நீதி நூல், நம் மக்களுக்கு இன்று குறள் ஒன்றைத் தவிர வேறில்லை. இதற்கு மேம்பட்ட ஒரு நீதி நூலை இன்று காண்பது அரிது.

நான் இவ்வாறு கூறும்போது, இங்கு ஒரு விளக்கத்தையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். குறளின் உயர்வைப்பற்றி— அதன் வழிகாட்டித் தன்மையைப்பற்றி நான் வற்புறுத்தும்போது, ஒரு சுயமரியாதைக்காரன், பகுத்தறிவுவாதி, திராவிட இயக்கத் தலைவன் என்கிற முறையில்தான் வற்புறுத்துகிறேனே அல்லாமல் வேறில்லை.

நானோ, என்னுடைய எல்லாக் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும், அவற்றிற்கான நெறிகளுக்கும் குறளையே ஆதாரமாக—அடிப்படையாகக் கொள்பவன் அல்ல. ஆனால் எனக்குக் குறள் ஒரு மேற்கோளாக (அத்தாரிட்டியாக) விளங்குகிறது. மேலும் எங்களுடைய கொள்கை, கருத்து ஆகியவைகளுக்குக் குறளில்ஆதரவு இருக்கிறது.

உதாரணமாகக் கூறவேண்டுமானால், நான் சில சமயங்களில் சர்தார் பட்டேல், கனம் நேரு ஆகியோர் சொற்களை ஆதாரமாகக் கொள்வதை எடுத்துக் கூறலாம்.

"நேற்றுப் பட்டேல் அவர்கள் பேசியுள்ள பேச்சு பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதை நேயர்கள் படித்திருப்பீர்கள். நான் காங்கரசின் தற்காலத் தவறான தன்மையைப் பற்றி என்ன கூறிவருகிறேனோ, அதையே அவரும் கூறியிருக்கிறார்."

இவ்வாறு, நான் பொது மேடைகளில் பேசும்போது, சர்தார் கூறியதையும் மேற்கோளாக எடுத்துக் கையாள்வதுண்டு. ஆனால் நான் காங்கரஸ் பற்றிக் கூறுவதை, அவர் எடுத்துக்காட்டாகக் கையாள முடியாதல்லவா? அதுபோலவே, எங்களது கருத்துக்கு—கொள்கைக்கு குறள் ஆதாரமாக விளங்குவதைக் காண்கிறோம். ஒரு பெரிய மளிகைக் கடையிருந்தால், "இந்த ஊரிலேயே இது தான் பெரிய மளிகைக் கடை, இங்கு சென்றால் தேவையான எந்தப் பொருளையும் பெற்றுக் கொள்ளலாம். யார் யாருக்கு எது தேவையோ, அதெல்லாம் ஏராளமாய் அங்கே இருக்கிறது. உனக்கு வேண்டுமானால் நீ போய் வாங்கிக் கொள்" என்று மளிகைச் சாமான் தேவைப்பட்ட ஒருவனுக்குக் கூறுவதுபோல, மக்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய யாவும் ஏராளமாய் குறளில் இருக்கிறது என்கிற அளவில்தானே ஒழிய, அந்தக் கடையில் இருப்பதெல்லாம் வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதல்ல. அதுபோலவேதான், நான் குறளை நாடெங்கும் எடுத்துக் காட்ட முற்பட்டிருப்பதும், என்னைச் சார்ந்த கழகத் தோழர்கள் குறளைப்பற்றிப் பிரசாரம் செய்வதுமாகும்.

இதை ஏன் இந்த முறையில் விளக்க வேண்டியிருக்கிறதென்றால், எனது கொள்கைக்கு—கழகக் கொள்கைக்கு ஆதாரம் வைத்தே அளந்து எழுத வேண்டியிருக்கிறது. ஏன்என்றால் குறளில் உள்ள சில கருத்துகள் வேறு பலரால் உரைகாணும்போது அவை எனக்கும், சுயமரியாதை—திராவிட இயக்கத்துக்கும் மாறாக, பின்பற்ற முடியாததாக இருந்தாலும் இருக்கலாம். உதாரணமாக, நானோ, மாமிச உணவு உட்கொள்ளுகிறேன்; குறளோ மாமிச உணவை ஒப்புக் கொள்வதில்லை என்கிறார்கள். ஆதலால் இவன் குறளின்படி நடப்பதில்லை என்று சில புலவர்கள் என்னைக் குறை கூறி, மக்களை எளிதில் ஏமாற்றி விட முடியும். எனவேதான், நான் இவ்விளக்கத்தைத் திராவிடரியக்கத் தலைவன் என்கிற முறையில் கூறவேண்டியிருக்கிறது.

இதைத் தவிர்த்துப் பொதுவாகக் கூற வேண்டுமானால், நம் மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான உயர்ந்த நெறியையும், மனிதனிடம் மனிதன் நடந்து கொள்ளும் முறையையும் வழி வகுக்கக், குறளுக்கு மேலான ஒரு நீதி நூல் வேறு கிடையாது என்பதே எனது எண்ணமாகும். பொதுவாக ஒழுக்கம், நல்நடத்தை, நாகரீகம் என்

பவை எல்லாம் மனிதனிடம் மனிதன் நடந்துகொள்ள வேண்டியதையே அடிப்படையாகக் கொண்டதாகும். அதற்கான நெறிகள்—வழிகள் குறளில் காணலாம். சுலபமாகக் கூறவேண்டுமென்றால், குறள் ஒரு பகுத்தறிவு நூல்! மற்றவை நம்பிக்கை நூல்! அதாவது சரியோ தவறோ நம்பிக்கை கொள்ள வேண்டிய நூல்!

### இலட்சியம் நிறைவேற, சிந்தனை வேண்டும்!

மக்களுக்கு வேண்டுவது என்ன? திராவிடர் கழகம் வேண்டுவதும் என்ன? மக்கள் எனப்படுவோர் யாவரும் மனிதத் தன்மையுடன் வாழவேண்டும், மக்கள் அனைவரும் சமமான ஜாதி—பிறவி என்று எண்ண வேண்டும், மானத்துடன் ஒருவர்க்கொருவர் அன்பு நெறியுடன் வாழவேண்டும், ஒருவர்க்கொருவர் நன்மை—உதவி செய்ய வேண்டும். இவையே திராவிடக் கழகத்தின் இலட்சியமாகும். இவற்றைப் பெறவேண்டுமானால் மக்கள் சிந்தனா சக்தியைப் பெற வேண்டும்.

இந்தச் சிந்தனாசக்தி, மிருகத்தைப் பொறுத்தவரையிலும் அதற்கு வேண்டாதிருக்கலாம். ஆனால் பகுத்தறிவைப் பெற்றிருக்கும் மனிதன்—மற்றவர்களோடு கூடி வாழவேண்டிய ஜீவனாக இருக்கும் மனிதன், சிந்திக்கும் சக்திக்கு உட்பட்டே தீரவேண்டுமல்லவா? இவ்விதச் சிந்தனாசக்தியைத் தடுத்து, அதை அழித்துவிட வேண்டுமென்பதே ஆரியத்தின் அடிப்படையாகவும், ஒரு சிறு கூட்டத்தினரின் தொழிலாகவும், மதமாகவும் இருந்து வருகிறது. அவர்களின் இந்தத் தத்துவத்திற்கே மற்ற நீதி நூல்களும், சைவ—வைணவ நூல்களும் அவற்றிற்கு ஆதாரமான கடவுள்களும் பக்கத் துணையாய் இருந்து வருகின்றன. இப்பேர்ப்பட்ட நீதி நூல்களும், கடவுள்களுமே நம்மீது சுமத்தப்பட்டுவிட்டன. எனவே இவ்வித ஏமாற்றுதலை எதிர்த்தொழித்து உண்மையைக் காட்ட, ஒரு நெறி-வழி இன்றியமையாததாயிருக்கிறது. அதற்காகவே நாம் திருக்குறளை நீதி நெறி நூலாகக் கொள்கிறோம்.

### குறளை ஏன் ஆதாரம்காட்டுகிறோம்?

திராவிட இயக்கத்தினராகிய நாங்கள் பல கடவுள்—அவை பற்றிய பல மதம்—புராணம் ஆகியவற்றை எதிர்த்து வருகிறோம். அவைகளை எதிர்க்கும் போது அவற்றை வளர்த்து—அவற்றால் பயனடைந்து வரும் கூட்டத்தினரோ, பொது மக்கள் எங்களைத் தவறாகக் கருதிக் கொள்ளுமாறு தந்திரஞ் செய்கின்றனர். பின்னர் தெளிவு பெற்று, "இப்படி எதிர்க்க, உனக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?" என்று நம்மைக் கேட்கும் நிலையை மக்கள் அடைகின்றார்கள். இந்த நிலையில் தான், அந்த ஆதாரத்திற்கு நாங்கள் குறளையே எடுத்துக் காட்டுகிறோம்.

### கடவுளையே காணவில்லையே!

ஏனெனில் குறளுக்குள் கடவுள், மதம், ஜாதி, மோட்சம், முன்ஜென்மம் என்பவை போன்ற சொற்கள் இல்லவே இல்லை. இவ்வாறு நான் கூறுவதைக் கேட்கச் சிலர் ஆச்சரியப்படக் கூடும். ஆனால் உறுதியாகக் கூறுகிறேன், குறள் என்கிற நூலில், கடவுள் என்ற சொல்லோ, கடவுள் என்ற ஒரு வஸ்துத் தன்மையோ அறவே இல்லை. கடவுளே இல்லையானால் மற்றவற்றை எப்படி அதில் காண முடியும்?

அது மட்டுமல்ல, தமிழனுக்குக் கடவுள் என்கிற ஒரு பொருள், இருப்பதான கருத்து முன்பு இருந்ததேயில்லை. அதாவது குறளுக்கு முந்திய தொல்காப்பியத்திலும் கடவுள் என்ற சொல்காணப்படவில்லை. கடவுள் என்பதைப் பழங்காலத் திராவிட மக்கள் கொண்டு இருந்தார்கள் என்றால், இந்த இரண்டு நூல்களிலும், அந்தந்த ஆசிரியர்கள் அதைப் பற்றி நன்றாய் விளக்கியிருக்கமாட்டார்களா? அதைப்பற்றி நாம் எப்படி நடந்து கொள்வது என்பதைக் குறித்திருக்க மாட்டார்களா? ஆனால் புலவர்கள் இதைச் சுலபமாக ஒப்புக் கொள்வதில்லை.

### மதமும், ஜாதியும், இல்லையே தமிழில்!

அது மட்டுமா? தமிழனுக்கு மதம் என்பது ஒன்று இருந்ததாகவும் ஆதாரம் கிடையாது. இன்று மதம் என்பது பெருவழக்காய் ஒரே ஒரு கருத்தில்தான் அதாவது கடவுளையடையும் மார்க்கம் என்கிற அர்த்தத்தில்தான் பயன்படுகிறது. இந்த மதம் என்கிற சொல் தமிழ்ச் சொல்லா? தமிழில் மதம் என்பதே இல்லையே! மதத்திற்குப் பதிலாக அந்த அர்த்தத்தைக் கொடுக்கக் கூடிய வேறு சொல் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், சமயத்துக்குத் தக்கபடி மற்றொரு சமஸ்கிருதச் சொல்லையோ, அதனுடைய சிதைவையோதானே பார்க்கமுடியும்? மனிதன் மற்றொரு மனிதனிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய பண்புகளைத்தான் நமது முன்னோர்கள் நெறி—ஒழுக்கம்—நீதி கோட்பாடு என்கின்ற தலைப்பில் கூறியிருக்கின்றார்களே யல்லாமல், மதம் என்ற சொல்லுக்கும், தமிழனுக்கும்—தமிழுக்கும் ஒரு சிறிதும் சம்பந்தம் கிடையாது. இதைப்போலவே, தமிழனுக்கு ஜாதியும் இருந்ததில்லை. அப்படி இருந்திருந்தால், நிச்சயமாகச் சொல்லுகிறேன், குறளிலும் கடவுள்—மதம்—ஜாதி முதலியவை இடம் பெற்றிருக்கவேண்டும். அல்லது தமிழில் அதற்கு சொல் இருக்கவேண்டும்.

இவ்வாறு நான் கூறுவது—முடிவு கட்டுவது தவறாக இருந்தாலும் இருக்கலாம். அந்தத் தவறை யாரேனும் எடுத்துக்காட்ட முன் வருவார்களானால் திருத்திக் கொள்ளத் தயங்க மாட்டேன். ஆனால், தமிழனுக்கு மதம் என்பதோ ஜாதி என்பதோ ஒன்று இருந்ததாக எடுத்துக்காட்ட, இன்றுவரை எவராலும், எவ்வித ஆதாரத்தையும் காட்ட முடியவில்லையே.

கடவுள் வாழ்த்து என்று, குறளில் உள்ள ஒரு பிரிவுக்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதே என்றால், வள்ளுவர் தமது குறளில் எங்கேயாவது கடவுள் என்று குறிப்பிட்டிருக்கிறாரா? ஆனால் சில நற்பண்பு கொண்டமகனை வழிபடுக என்று கூறியிருக்கிறார். வழிபடு என்றால் பின்பற்றிநட என்பதுதானே. இவ்வித நற்பண்பை மக்கள் சமுதாயத்திலிருந்து அடியோடு ஒழிக்கும் வகையில், இன்றையக் கடவுள்—மதம் எனபன இருந்து வருவதாலேயே, திராவிட இயக்கத்தவர்களாகிய நாங்கள், கற்பனைக் கடவுள் ஒழிய வேண்டும்-மதம் ஒழிய வேண்டும்—ஜாதி ஒழிய வேண்டு

மென்றுகூறி, அதற்கானவற்றை எங்களால் இயன்ற அளவு பிரசாரம் செய்து வருகிறோம்.

### மோட்சம் என்பது முன்பு இல்லையே!

நிற்க, வள்ளுவர் தமது குறளிலே அறம், பொருள், இன்பம் என்கிற மூன்று பிரிவுகளிலேயே மக்களின் நல்வாழ்க்கையையும், அதற்கான ஒழுக்கத்தையும் வரையறுத்திருக்கிறார். நாலாவதான ஒரு பிரிவு, வீடு, அதுதான் மோட்சம் என்று கூறுகிறார்களே, அதை அவர் குறிப்பிடவேயில்லை. மோட்சம் என்கிற கருத்தைத் தரக்கூடிய ஒரு சொல்லே, தமிழில் கிடையாது. அப்படியிருக்க அதை அவர் எப்படிக் குறிப்பிட முடியும்? வீடு என்கிற சொல் தான் மோட்சத்தைக் குறிக்கிறதென்றால், தமிழ் மக்கள் வீடு இல்லாமலா இருக்கிறார்கள்? ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு உண்டு! (ஆரியக் கூட்டுறவால் பாழ்பட்ட சமுதாய அமைப்பில், ஒரு சிலர் வீடிழந்து அனாதைகளாயிருப்பது என்பது வேறு சங்கதி) பிற்காலத்தில் ஆரிய மதப்பித்துப் பிடித்தவர்களால், மோட்சம் என்பதற்கு வீடு என்பது, தேடிக் கண்டெடுத்துப் புகுத்தப்பட்டிருக்கிறதேயல்லாமல் வேறு ஏதாவது பொருத்தம் இருக்கிறதா? ஆகவே தமிழனுக்கு மோட்சம் என்கிற ஒன்று, அன்று இருந்ததில்லை என்பது நன்றாய் விளங்கவில்லையா?

### வள்ளுவரின் மூன்று பிரிவு வேறு! வடவரின் நான்கு பிரிவு வேறு!

மற்றொன்றும் நீங்கள் கவனிக்க வேண்டும். "தர்மார்த்த காமம்" என்பதைத்தான் வள்ளுவர் அறம் பொருள் இன்பம் என்கிற தத்துவமாக மாற்றிச் சொல்லியிருக்கின்றார் என்று சிலர் வியாக்கியானம் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். அறம், பொருள், இன்பம் என்பன வேறு. தர்ம—அர்த்த—காம—மோட்சம் என்பன வேறு. உதாரணமாகக் காமம் என்பதை இன்பம் என்று எவனாவது கூறுவானேயானால், அக்கூற்றை அறிவுலகம் ஏற்க முடியுமா என்று கேட்கிறேன். காமத்தின் தன்மை என்ன? இன்பத்தின் நிலை என்ன? காமம், கெட்ட குணங்களில் ஒன்று. ஆசை அல்லது ஒரு நோய் (பலவீனம்) காமம் என்பது கண்டவுடன் காட்சி விகாரத்தால் தோன்றுவது. காமம் என்பதானது, கண்ட இடமெல்லாம் கண்டவாறு, மனத்தின் கண்ணை காட்சியளித்து, வெறியையுண்டாக்கி, நேர்மையை அழிக்கத்தக்கது ஆதலால் அதிலிருந்து விடுபடவேண்டும். அதனால் பெரிதும் கேடுதான்—அழிவுதான் பயனாக இருக்க முடியும். ஆனால் இன்பமும், அன்பும் அப்படியல்ல. அவை என்றும் நீடித்திருப்பது—இருக்க வேண்டியது. காமத்துக்கும் இன்பத்துக்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போன்றதேயாகும். எனவே வள்ளுவர் வகுத்த இன்பத்துக்கு கேவலம் காமத்தை ஒப்பாகச் சொல்வது, ஒட்ட முயற்சிப்பது அறிவுக்கோ, அனுபவத்துக்கோ ஏற்றதல்ல என்றே கூறுவேன். அன்பைப்பற்றி வள்ளுவர் தனிப்படக் கூறியிருக்கிறார்.

இவ்வாறாகவுள்ள திருக்குறளைச் சிலர் தங்களது சொந்த நலனுக்கும் ஆதிக்கத்துக்கும் ஏற்றவாறு, குறுகிய மனப்பான்மையில் வியாக்கியானம் செய்தும் உரை எழுதியும் வருகின்றனர். இந்தப் பித்தலாட்டங்களையெல்லாம் ஒழிக்கவேண்டிய பொறுப்பு, தமிழ்ப் பேரறிஞர்கள், நாவலர்கள், பேராசிரியர்களுடையதல்லவா?

இன்பம் என்பதைக் காமமென்பதனோடு ஒப்பிட்டுக் கூறுவதை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியாதோ, எப்படி அறிவுக்கு ஏற்றுக்கொள்ளத் தகாததாயிருக்கின்றதோ அதுபோன்று, வீடு—மோட்சம் என்பதையும் தமிழர்கள் ஒப்புக்கொள்ள முடியாததாகும். வள்ளுவர் வகுத்திருக்கும் அறம், பொருள், இன்பம் என்கிற மூன்றின் மூலமாக, மனித சமுதாயத்தின் நல் வாழ்வுக்கு அவர் வழி வகுத்துவிட்டார். அறம் என்பது மனிதனிடம் மனிதன் நடந்துகொள்ளவேண்டிய மனிதனின் ஒழுங்குமுறை—கடமை. பொருள் என்பது மனித வாழ்க்கைச் சாதனம். இன்பம் என்பது மனிதன் அனுபவிக்கும் நற்பேறு. இந்த அடிப்படையில் இந்த மூன்று பிரிவைத் தவிர, நாலாவது பிரிவு என்று சொல்லப்படுகிற மோட்சத்தைப் பற்றியோ, மறுபிறவி, முன் ஜன்மம், கர்மம் என்பவைகளையோ குறளில் காணவேமுடியாது.

### கடவுள் எப்போழுது உருவம் பெற்றதோ, அப்போழுதே கேடும் உருவானது!

கடவுள் என்பது, வஸ்து ரூபமாக அதாவது ஒரு பண்டமாக வந்தபின்னர்தான், அதன் தன்மை இன்றுள்ள மோசமான நிலைக்குச் சென்றுவிட்டது. அதாவது கடவுளும் மனிதனைப் போல் கூடா ஒழுக்கங்களுடன் காட்சியளிக்க வேண்டியதாயிற்று. சாணி உருண்டையும், குழவிக் கல்லும், குரங்கும், கழுகும், தேளும், பாம்பும், அரச மரமும், மனிதரில் சில இழி மக்களும் கடவுள்களாகக் கற்பிக்கப்பட்டதால், எந்த உயர்ந்த தத்துவங்களும், நீதி நெறிகளும், ஒழுக்கமும் கடவுள் தன்மையாகக் கொண்டுவரப்பட்டனவோ, அவைகள் எல்லாம் பாழ்படுத்தப்பட்டுவிட்டன.

எங்களைப் போன்றவர்கள், கடவுள் என்பது, இவ்வித உருவங்களும் வழிபாடுகளுந்தானா என்று கேட்டால், "அவைகள் எல்லாம் முட்டாள் ஜனங்களுக்காக" என்று வெகுசுலபமாகப் பதில் கூறுகின்றனர். இவ்வாறு கூறும் பதில் அர்த்தமுடையதென்றால், கடவுளுக்கு உருவம் ஏற்படுத்தப்பட்ட பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும், ஏன் மக்கள் இன்னும் முட்டாள்களாகவேயிருக்கின்றனர்? ஒழுக்கமற்றவர்களாக இருக்கின்றனர்? மற்ற விஷயங்களில் எல்லாம் முன்னேறிவரும் மனிதன், கடவுள் தன்மையில்மட்டும், அதை உருவமாகக் காட்டிய பிறகும்கூட முட்டாளாகவேயிருந்து வரவேண்டுமா? கடவுள் வழிபாட்டின் பேரால், இன்னும் காட்டுமிராண்டித்தனத்தை வளர்த்துத்தான் வரவேண்டுமா?

எனவே, மக்கள் இயற்கையில்—பிறவியில் முட்டாள்களாயில்லை. ஆரியக் கடவுள் தன்மையில் முட்டாள்தனத்தைப் புகுத்தப்பட்ட நாளிலிருந்துதான், மனித சமூகம் கீழ் நிலைக்குவர ஆரம்பித்துவிட்டது என்பது எனது உறுதியான எண்ணமாகும்.

### இந்தக் கடவுள் தன்மை எதற்காக?

இன்றையக் கடவுள் தன்மை

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

புளுகு மூட்டை.

# மீனாட்சி!

"தாயே மீனாட்சி! என்னை இப்படித் தவிக்கவிடலாமா? என அறிவறிந்த பருவமுதல் உன்னை ஆராதித்து வருகிறேனே. என் எனக்கு இன்னும் அருள் புரியாதிருக்கிறாய்? வயது ஏறிக்கொண்டே போகிறது. மணப்பருவங் கடந்து பல ஆண்டுகளாகி விட்டன. என் மனதுக்கேற்ற மங்கையொருத்தியை எனக்கு மனைவியாக்கக் கூடாதா? எத்தனை காலம் இப்படி ஏங்கிக்கிடப்பது! என் சித்தம் சோர்ந்துவிட்டது; பித்தம் பிடிக்கும் நிலைக்கு வந்துவிட்டேன். என் கதி இதுதானா?'' என்று பலவாறாக நெஞ்சோடு கூறிக்கொண்டேன், தாங்கவொண்ணா வருத்தத்துடன்...

"அன்பா! என் வருந்துகிறாய்? இதோநானே வந்துவிட்டேன்'' என்று பின்புறமிருந்து ஒரு ஒலி கேட்டது. இதென்ன! யாழிடைப் பிறவா இசையா! குழலிடைப் பிறவாத குரலா! என்ன இனிமை! திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தேன். என் கண்ணொளி மழுங்கிவிட்டது. கண்களை அகல விழித்துப் பார்த்தேன்! அழகெல்லாம் திரண்டு ஒருருவானதுபோல் ஓரிள மங்கை! அவள் கண்கள் காதுவரை நீண்டு பெருத்திருந்தன. அவற்றின் பார்வை! அதிற்பட்டதும் என் உடல் நரம்புகள் அனைத்திலும் இயம்பவியலாதஓரின்ப உணர்ச்சி! அப்பப்பா!!

"அம்மா! யார் நீங்கள்? இங்கே...''

"அன்பா! தெரியவில்லையா என்னை? நான்தான் அங்கயற்கண்ணி.''

"அப்படியென்றால்.........?''

"ஓ! இப்படிச் சொன்னால் உனக்கு விளங்காதோ! மதுரை மீனாட்சியென்று சொன்னால் புரியுமல்லவா?''

"தாயே, நான் பெரும் பேறெய்தினேன்! உன்னை என் கண்குளிரக் காண என்ன தவம் செய்தேனோ...?''

"தவமொன்றும் செய்யவேண்டாமப்பா! நான் வலிய வரவேண்டிய சந்தர்ப்பமும் வந்து நேர்ந்தது. வாழ்வதா, சாவதா என்று முடிவுகட்டும் காலம் எனக்கு நெருங்கிவிட்டது.''

"தாயே நீ சொல்லுவது திகைப்பாயிருக்கிறதே! மதுரை மீனாட்சி என்றால் மாநிலமே புகழ்கிறதே! உனக்கிருக்கும் செல்வமும், செல்வாக்கும் உலகில் வேறு யாருக்குண்டு? அப்படியிருக்க இப்படிக் கூறுவதேதனால்?

"செல்வமிருந்தால் சுகமாக வாழ முடியுமா? மணமாகிய இத்தனை காலமாய் என்ன இன்பத்தைக் கண்டேன். இதுவரை தற்கொலை செய்துகொள்ளாமல் இருந்ததுதான் ஆச்சரியம்! ஆனால் இப்போது ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். வளைந்த வாழ்வை வளமுறச் செய்வது என் கையில்தானே இருக்கிறது? ஏற்பட்டுள்ள வாழ்க்கை இன்பமளிக்காவிட்டால் அதை மாற்றிப் புதுப்பித்துக் கொள்வது என்று தீர்மானித்துவிட்டேன். இதனால் என்ன நேரிட்டாலும் சரி...!''

"அம்மா! நீ பேசிக் கொண்டே போகிறாய். புதிர் போலிருக்கிறதே தவிர புரியவில்லையே ஒன்றும்!''

"புரியும்படி சொல்கிறேன் கேள். அன்பா! மலையத்துவச பாண்டியனுக்கு மகளாய் மதுரை மாநகரிற் பிறந்து, சீருஞ் சிறப்புமாய் வளர்ந்து வந்தேன். எங்கோ வடநாட்டிலிருந்து வந்த இந்தச் சோமசுந்தரர் என்னை மாலையிட்டார். மணமாகும் சமயம் நல்ல நிலையில்தான் காணப்பட்டார்; இல்லையேல் அன்றே மறுத்திருப்பேன். இவருடைய பழங்கால நடவடிக்கைகள் ஊரறிந்த உண்மைகள்தானே. ஆனால் இப்போது திருந்தியிருப்பார் என்று நம்பித்தான், இவருக்கு மனைவியாவதில் திருப்தி கொண்டேன். தந்தைக்கு நான் ஒரே மகளானதால் தன்மருகரை மதுரையிலேயே தங்கச் செய்துவிட்டார். தனக்குப்பின் நாட்டை இவர் தலையில் கட்டலாம் என்ற எண்ணத்துடன். கலியாணமாகும்வரை பரம சாதுபோல் காணப்பட்ட இவர், பிறகுதான் அட்டகாசத்தை ஆரம்பித்துவிட்டார். மதுரை நகரே கைகொட்டிச் சிரித்தது இவரை நோக்கி''

"அப்படி என்னதான் செய்துவிட்டார், தகாத காரியங்கள்''

"ஒன்றா, இரண்டா! அறுதியிட்டுச் சொல்ல. உலகமே கண்டு வியக்கும் ஒப்பற்ற எழிலரசியாய் நான் வீட்டிலிருக்கும்போது, இவர் என்னை ஏறெடுத்தும் பார்க்காமல், எங்களூரில் வைசியத் தெருவிலுள்ள கன்னிப் பெண்களை மனதிற் கருதி, வளையற்காரன் வேடமணிந்து, தினந்தோறும் அங்கு சென்று, நாளடைவில் எல்லோருக்கும் 'பிள்ளை வரம்' கொடுத்துவிட்டார். இந்தக் கேள்வியுற்று நான் துடிதுடித்துப் போனேன். இவர் எங்கேயோ காட்டுக்கு ஓடிவிட்டார். அங்கு சென்றும் சும்மாயிருக்கவில்லை. தாய்ப் பன்றி ஒன்றை, வேடனொருவன் கொன்றுவிடவே, அதன் முப்பத்திரண்டு குட்டிகளும் கதறி அழுவதைக் கண்டு, இவருக்குக் கருணைவெள்ளம் கரைபுரண்டோடிற்றாம். உடனே தாய்ப் பன்றியின் இறந்த உடலிற் புகுந்து, உயிருண்டாக்கி பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்த்தாராம். அவை பெரிதானதும், தான் வளர்த்த குட்டிகளானதால் அவைகளுக்குப் பதவிதரும் பொருட்டு, நாட்டிலிருந்த அரசாங்க அமைச்சர்களில் முப்பத்திரண்டுபேரைக்காரணமின்றிப் பதவியிலிருந்து விலக்கி, அந்த இடங்களில் பன்றிக் குட்டிகளைப் போட்டு நிரப்பினாராம்...''

"சரிதான் காமராஜர் வேலைகூடத் தெரியும் போலிருக்கிறது''

"இத்துடன் ஒழிந்திருந்தால் தொலைகிறதென்று விட்டிடலாமே. பதவியிலிருந்து நீக்கப்பட்டவர்களின் மனைவிமார்களை, இப்பன்றிக் குட்டிகளுக்கு மனைவிகளாயிருக்கும்படியும் ஏற்பாடு செய்து வைத்து விட்டார். இதையறிந்த அப்பேதைப் பெண்கள் மனம் என்ன பாடு பட்டிருக்கும்?''

"ராமராஜ்ய நியாயத்தையும் தோற்கடிக்கும் போலிருக்கிறதே இது!''

"அது மட்டுமா? அரசியற்காரியங்களைக் கவனிப்பதேயில்லை. சதா ஏதாவது திருவிளையாடல் புரிவதுதான் வேலை! என்னை அவமானப்படுத்துவது போல் தெருக்களில் விறகு விற்பது, கூலிக்கு மண் வெட்டிப் போடுவது, குதிரை பிடிப்பது... அடடா, ஒரு வேலை பாக்கியில்லை, இவர் பார்க்காதது.

காலம் போய்க் கொண்டேயிருக்கிறது. நானும் பெண்தானே. ஒரு பெண்ணுக்குரிய ஆசாபாசங்கள் எனக்கும் ஏற்படாதா? ஒரு குழந்தை பெறவேண்டும் என்றுகூட ஆவலுண்டாகாதா? கணவனுடன் உல்லாசமாய் சல்லாபம் புரியவேண்டுமென்று இச்சை தோன்றாதா? எவ்வித இன்பமுமில்லாமல் ஏங்கிக்கிடந்தேன். என் உண்மை நிலை தெரியாமல், எத்தனை பேர் என்னிடத்தில், தமது குறைதீர முறையிடுகிறார்கள், பைத்தியக்கார மக்கள்!

உண்மையில் பாடுபடுவது இந்நாட்டு ஆதிக்குடிகள். ஆனால் அண்டிப் பிழைக்க வந்த ஆரியப்பார்ப்பனருக்குத்தான் இவர் உதவி செய்வதெல்லாம். பார்ப்பனர் என்ன தவறு செய்தாலும் பொறுத்துக்கொள்வார். தமிழர்களுக்குத்தான் தொல்லையையும் துன்பத்தையும் உண்டாக்குவார். உதாரணத்துக்கு இந்தக் கதையைக் கேளேன்! அவந்தியில் ஒரு பார்ப்பன இளைஞனுக்குத்

தன்னைப் பெற்ற தாயின் மீதே காதல் பிறந்தது. அவளும் இணங்கினாள்; பார்ப்பனத்திதானே! ஆனால் தகப்பன், ஊர்பழிக்குமேயென்று இவர்கள் செயலைத் தடுத்தான். தனது தகாத செய்கைக்குத் தடையாயிருந்த தந்தையை, மண்வெட்டியால் கொன்று கொல்லையில் புதைத்து விட்டான் இந்தப் பாதகன். உடனே, தாரமாகப் பயன்படும் தாயாரையும் அழைத்துக் கொண்டு மதுரைக்கு வந்து விட்டான். அவனை ஆதரித்துக் காப்பாற்றினார் இந்தத் தயாள மூர்த்தி.!

சுந்தரமூர்த்தி என்று இன்னொரு பார்ப்பன இளைஞன்! இவன் மயிலாப்பூரிலே சங்கிலி என்றொரு பெண்ணை மணம் புரிந்து, அவளை அங்கேயே விட்டு விட்டு திருவாரூருக்கு ஓடி வந்தான். இங்கே பரவையென்றொரு தாசியை விரும்பினான். இவன் விருப்பத்தை நிறைவேற்றியதோடல்லாமல், இவர்களுக்கிடையில் ஊடல் ஏற்படும்போதெல்லாம் இவர்தான் தூது சென்று சமாதானப் படுத்துவதாம்!

சம்பந்தன் என்று மற்றொரு பார்ப்பனச் சிறுவன். மகா நன்றிகெட்ட பாதகன் இவன். ஒரு நாள் குளத்தங் கரையில் நின்று கொண்டு அழுதான். பசியால்தானே குழந்தை அழுகிறான் என்று பரிதாபங் கொண்டு, ஓடோடிச் சென்று பொற்கிண்ணத்தில் ஞானப் பால் கொஞ்சம் கொடுத்தேன். கொடுத்தவள் நான். குடித்த பின் அந்தப் பயலோ "தோடுடைய செவியன்" என்று இவரைப் புகழ்ந்து பாடத் தொடங்கி விட்டான். சிறுவனாயிருந்தாலும் ரொம்பத் திமிர் இவனுக்கு. என் கணவரைப் புகழ்ந்துபாடும் போதெல்லாம் என் தோளழகைப்பற்றியும், மார்பழகைப்பற்றியும் ஒரு வார்த்தை இணைத்தேதான்பாடுவான். வெட்கங்கெட்டதனமாய் இவனுக்கு முத்துப்பல்லக்கு, முத்துக்குடை முதலியவை தந்து இவர் அவனைப் பெருமைப்படுத்தினார். பாவம், அப்பர்! மிக்க துன்பப்பட்டவர். அவர்கூட இந்தச் சிறுவனது பல்லக்கைச் சுமந்து சென்றிருக்கிறார், தமிழனாகப் பிறந்துவிட்ட பாவத்திற்காக!"

"இன்றுகூட அந்நிலையைத்தானே காண்கிறோம் இங்கே!"

"இன்னும் கேள்! மதுரையில் ஒரு காலத்தில் அன்பு மணங் கமழும் சமண மதம் பரவி வேரூன்றிவிட்டது. இதை எப்படியாவது அழிக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு, என் கணவரின் துணையுடன் இந்தச் சம்பந்தனென்ற சிறுவன் மதுரையில் கொட்டமடித்தான். அப்போது மன்னனாயிருந்த சுந்தரபாண்டியன் சமண மதத்தைத் தழுவினான். அவன் மனைவியோ, துரோகி! பார்ப்பன அமைச்சனான குலச்சிறையுடன் சேர்ந்து இனத் துரோகம் செய்தாள்."

"இங்கேயும் மீனாம்பாள் சிவராஜ் என்றொரு அம்மையார், இதே காரியத்தைத்தான் செய்துவருகிறார்கள்."

"மதுரையில் பல அட்டகாசங்களைச் செய்து, எட்டாயிரம் சமணப் பெரியார்களைக் கழுவிலும் ஏற்றிவிட்டார்கள் இந்தச்சண்டாளர்கள். இவர்கள்தான் 'அன்பே சிவம்' என்று கொஞ்சங்கூட நெஞ்சிலே நேர்மையின்றிப் பறைசாற்றிவருகிறார்கள் இன்றும். இதையெல்லாம் பார்த்துப் பார்த்து என் மனம் படாதபாடுபட்டது. எனக்குக் கணவனாக வந்து வாய்த்தவரோ வாழ்க்கை நடத்தத் தெரியாதவர். பார்ப்பனாலனே இவரது குறிக்கோள். ஆகவே என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தேன். ஒரு வழியும் புலப்படவில்லை. இந்தப் பக்தர்கள் என்பவர்களாவது கொஞ்சம் புத்தியுடனிருப்பார்கள் என்று எண்ணினேன். அதற்கும் இடமில்லை."

> ## உண்டா?
>
> சுயமரியாதைச் சங்கத்திற்கு கடவுள், மதம், ஜாதி, பிரார்த்தனை உண்டா?
>
> உண்டு! அவையாவன:—
>
> அறிவே கடவுள்—
> மானமே மதம்—
> நாணயமே ஜாதி—
> ஆராய்ச்சியே பிரார்த்தனை—
>
> —பெரியார்
>
> (1929-ம் ஆண்டில் பெரியார் அவர்களை ஒரு கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு உடனே சொன்ன பதில் இதுவாகும்.)

"ஏனம்மா அப்படிச் சொல்லுகிறாய்?"

"பிறகென்ன! ஆண்டவனைப் பாடுகின்ற அத்தனைபேரும் தம்மைத் தலைவியாகவும் அவரைத் தலைவனாகவுமே கற்பித்துப் பாடுகிறார்கள். என்னைப்பாடுபவர்கள்மட்டும் ஏன் என்னைத்தாயாகமதித்துப்பாடவேண்டும்? அல்லது குழந்தையாக மதித்துப் பிள்ளைத் தமிழ் பாடவேண்டும்? என் நான் இயற்கையாக இருக்கின்ற நிலையில், ஒரு பருவ மங்கையாக மதித்துக் காதற் பாட்டுகள் பாடக்கூடாது? நான் கவிதை வடிவிலாவது காமச்சுவையை ரசிக்கலாகாதா?"

"தாயே! ஒரு வேளை உனக்கும் எங்கள் 'மாஜி'க் கல்வி மந்திரியைப் போல, காமத்துப்பால்பிடிக்காதென்று உன் பக்தர்கள் பாடியிருக்கிறார்கள் போலும்! ஆனால் என்னால் உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியும்."

"ஆம். அதையறிந்துதான் நான் உன்னை நாடி வந்தேன். அதுமட்டுமல்ல, இதுவரை எல்லாக் கடவுளரும் மனிதப் பெண்ணைக் காதலித்ததாகவும், கற்பழித்ததாகவும், களவாடியதாகவும் கதையிருக்கிறதே ஒழிய, எந்த மனிதனையாவது கடவுட் பெண்டிர் காதலித்ததாகக் கதையுண்டா? ஏன் இதுமட்டும் இல்லை? இதையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்த பின்னர்தான் இன்று ஒரு முடிந்த முடிவு செய்தேன். கட்டிய கணவனோ கவைக்குதவாதவர். ஆகவே பகிரங்கமாக அவர் இனி என் கணவர் அல்ல என்று அறிவித்துவிடப் போகிறேன். அவர் வேண்டுமானால், தைரியமிருந்தால், எந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்து பார்க்கட்டும். அவரது சாயத்தை இன்னும் நன்றாக வெளுத்துவிடுகிறேன்!"

"தாயே இருக்கிற கணவரையும் விட்டுக் கன்னியாகவே காலங்கழிப்பதா?"

"அப்படியா நான் சொன்னேன்? அன்பா! நீயோ அந்தரங்க சுத்தியுடன் என்னிடம் அன்பு செலுத்துகிறாய். காலத்துக்கேற்ற கருத்தும், கண்ணிறைந்த கட்டழகும் கொண்டிருக்கிறாய். கலியாணமாகாமல் ஏக்கம் பிடித்தும் தவிக்கிறாய்."

புதுமையான ஒரு புரட்சி செய்வோம். உலகம் கண்டும், கேட்டுமறியாத வழக்கம். மதுரைமீனாட்சி, சாதாரண மனிதனை மறுமணம் புரிகிறாள்! என்ன சொல்லுகிறாய். அன்பா?"

"சொல்வதென்ன, மீனா! கரும்பு தின்னக் கூலி கேட்பேனா? மறுமணம் சீர்திருத்த முறையில் தானே! ஏனென்றால் இப்போதெல்லாம் அப்படிச் செய்தால் தான் சிறப்பு!......... அடே! அதற்குள் எங்கே போய் விட்டாய்! காணவில்லையே? மீனாட்சி! மீனாட்சி...!!"

* *

"அண்ணாச்சி! அண்ணாச்சி!! இன்னும் என்ன தூக்கம், பகலிலே! எழுந்து வாருங்கள், உலவப் போகலாம்" என்று கூறி எழுப்பி விட்டார் பக்கத்துறை நண்பர். நெஞ்சில் ஏதோ பாரத்தை வைத்தது போலிருந்தது, எதையோ பறிகொடுத்தவன் போல் சுற்றுமுற்றும் பார்த்தேன், எழுந்து நின்று கொண்டு.

["பெருச்சாளி"]

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

[உரிமை ஆசிரியருக்கே]

—(புலவர் குழந்தை)—

**1.** நிலமுதற் பொருள்: காடும், காடு சார்ந்த இடமும் முல்லை எனவும், மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும் பெயர் பெறும். வயல் சார்ந்த இடம்—தோட்டம். பாலைக்கு நிலமில்லை. முதுவேனிற் காலத்தில் மலையுங் காடும் வளம் பிரிந்த வறண்ட நிலையே பாலை எனப்படும்.

2. காலமுதற் பொருள்: மழை, பனி, வெயில் என்னும் பருவ மாறுபாட்டைக் கொண்டு நம் முன்னையோர் ஓராண்டை ஆறு பருவமாகப் பகுத்துள்ளனர். அவை கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப்படும். கார்-மழைக்காலம். குளிர்-கூதிர் எனவும் வழங்கும். 'கூதிர்' என்பதையே இப்போது 'கூதல்' என வழங்குகின்றனர். முன்பனி-முன்னிரவில் பனிப்பெய்தல். பின்பனி—பின்னிரவில் பனிப்பெய்தல். இவை முறையே ஆவணி முதல் இரண்டிரண்டு மாதங்களாம். ஒரு நாளை, மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் என அய்ந்தாகப் பிரித்துள்ளனர். வைகறை-கோழிகூவும் நேரம். கார் முதலிய ஆறையும் பெரும் பொழுது எனவும், மாலை முதலிய அய்ந்தும் சிறுபொழுது எனவும் பெயர் பெறும். பெரும் பொழுது பருவம் எனவும், சிறு பொழுது பொழுது எனவும், அழைக்கப்படும். ஆவணி, புரட்டாசி-கார். அய்ப்பசி, கார்த்திகை-கூதிர். மார்கழி, தை-முன்பனி. மாசி, பங்குனி-பின்பனி. சித்திரை, வைகாசி-இளவேனில். ஆனி, ஆடி-முதுவேனில்.

இன்ன இன்ன ஒழுக்கம், இன்ன இன்ன காலங்களில் நிகழும் என அவ்வகை ஒழுக்கத்திற்கும், பெரும்பொழுது சிறுபொழுதுகளை அமைத்திருக்கும் நமது முன்னையோரின் அறிவியல் நுணுக்கம் அறிந்து இன்புறத்தக்க தொன்றாகும். இன்றைய அறிவியல் ஆராய்ச்சியாளரும் (விஞ்ஞானிகள்) கண்டறியாத அவ்வளவு நுண்ணிய ஆராய்ச்சித் திறனாகும். இன்ன ஒழுக்கம் இன்ன காலத்தில்தான் நடக்கும் என்னும் வரையறை எளிதில் கண்டறியும் ஒன்றல்ல. நெடுங்கால ஆராய்ச்சிக்குப் பிறகு கண்டறிந்த உண்மை முடிவாகும். இக்கண்டுபிடிப்பே தமிழரின் பெருமைக்கோர் சான்றாக நின்று நிலவுகிறது. இவ்வளவு அறிவுத்திறன், தமிழ் மக்களால் அறிந்து இன்புற முடியாத நிலையில் குப்பையில் மறைந்து கிடக்கும் குன்றிமணி (குண்டுமணி) போல் கிடக்கிறது. காரும் மாலையும் முல்லை. கூதிர், முன்பனியும், யாமமும் குறிஞ்சி. வைகறை-மருதம். காலைநெய்தல். மருதம்நெய்தலுக்குப் பெரும்பொழுது ஆறும் உண்டு. பின்பனி, இளவேனில், முதுவேனிலும், நண்பகலும் பாலை.

| ஒழுக்கம். | பெரும்பொழுது. | சிறுபொழுது. |
|---|---|---|
| 1. முல்லை | கார் | மாலை |
| 2. குறிஞ்சி | கூதிர்<br>முன்பனி | யாமம் |
| 3. மருதம் | | வைகறை |
| 4. நெய்தல் | | காலை |
| 5. பாலை | பின்பனி<br>இளவேனில்<br>முதுவேனில் | நண்பகல் |

**3.** கருப்பொருள்.

தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம், பூ, தொழில், யாழ், பறை, தண்ணீர், ஊர் என்பன கருப்பொருள்களாகும். உணவு—அவ்வந்நிலத்தில் விளையும் உணவுப்பொருள். தண்ணீர்—குளம், கிணறு முதலியன. முல்லை முதலிய ஒழுக்கம்பற்றிப் பாடும்போது அந்நிலத்திற்குரிய தெய்வம், உணவு முதலிய கருப்பொருள்கள் அமையும்படி பாட வேண்டும். இதனால், வாழ்க்கையின் அடிப்படையிலேயே ஒழுக்கங்களை அமைத்திருந்தனர் என்பது வெளிப்படையாம். யாழ், பறை மொழியறிவைக் குறிக்கும். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய சங்கமருவிய அகப்பொருள் நூல்களெல்லாம், இக்கருப்பொருள்களை அமைத்தே பாடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக: முல்லைக்குத் தெய்வம்-மாயோன்; உணவு-வாகு, சாமை, பயறுவகைகள்; விலங்கு-மாடு, ஆடு, மான், முயல்; பறவை-காட்டுக்கோழி, காடை; மரம்-கொன்றை, குருந்து; பூ-முல்லை, பிடவு, தோன்றி; தொழில்-ஆடு மாடுகள் மேய்த்தல், வாகு முதலியன விளைத்தல்; யாழ்-முல்லை யாழ்; பறை-ஏறுகோட்பறை, அதாவது ஏறுதழுவும்போது அடிக்கும் பறை; தண்ணீர்-கான்யாறு; ஊர்-பாடி, சேரி, பள்ளி என்பன. அவ்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

குடி அரசு

30—4—49 சனிக்கிழமை.

# குறளும் பெரியாரும் !

திருவள்ளுவரின் திருக்குறளைப் பற்றி பெரியார் ஈ. வெ. ரா அவர்கள் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார்கள். அது இவ்வாரக் குடிஅரசில் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதை வாசகர்கள் ஊன்றிப் படிக்க வேண்டுமாய் வேண்டுகிறோம். ஒரு தடவை மாத்திரம் படித்தால் போதாது, இருமுறை மும்முறை வாசிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

குறள் ஒரு நீதி நூல் என்பது உலகம் ஒப்புக்கொண்ட உண்மை. என்றாலும் பெரியார் அவர்களின் கருத்துப்படி அது ஒரு கண்டன நூல் என்றே கருத வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் குறளை எழுதிய காலம், ஆரிய மதக் கடவுள்கள்—சாஸ்திரங்கள் — புராண இதிகாசங்கள்—ஆரியப் பழக்க வழக்கங்கள் இந்த நாட்டில் புகுந்துவிட்ட காலமாகும். அவைகளை மக்கள் நம்பத் தலைப்பட்ட காலமாகும். இல்லாவிட்டால், எடுத்துக் காட்டாக, "அந்தணர்" என்பவர் யார் என்கிற கேள்வியை எழுப்பிக் கொண்டு, அதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் வள்ளுவருக்கு எப்படி வந்திருக்க முடியும்?

"அந்தணர் என்போர் அறவோர்;
மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்"

என்கிற குறள், அந்தணர் என்கிற ஒரு ஜீவகாருண்யம் நிறைந்த தமிழ்ச் சொல்லை, ஜீவகாருண்யத்தின ஜன்ம விரோதிகளான பார்ப்பனர்கள், தங்களையே குறிப்பிடக் கூடிய ஒரு தனி ஜாதிச் சொல்லாக ஆக்கிவிட எத்தனிக்க, அந்த எத்தனமும் மக்களால் உண்மை என்று நம்பக்கூடிய அளவில் வந்துவிட்டதினால்தானே, 'அந்தணர்' என்பவர்கள் ஒரு ஜாதிக்காரரல்ல, அந்தணர் என்பது ஜாதிப் பெயரல்ல; யார் யார் மற்ற ஜீவன்களிடத்திலெல்லாம் பரிபூரண இரக்கத்தோடு மற்ற ஜீவன்களின் துன்பத்தை, தொல்லையை, கஷ்ட நஷ்டத்தைத் தங்களுடையது என்று கருதி, அவைகளைப் போக்குவதற்கான பரிகாரத்தை ஓய்வு ஒழிச்சலில்லாமல் - வாழ்க்கையில் ஒரு லட்சியமாகக் கொண்டு நடக்கிறார்களோ, அவர்கள்தான் அந்தணர்கள் என்று விளக்க வேண்டியதாகிவிட்டது? பார்ப்பனர்கள் தங்களை அந்தணர்கள் என்று சொல்லிக் கொள்வது தப்பு; அவர்களை, மற்றவர்கள் அந்தணர்கள் என்று உடன்பட்டு பேசுவது, எழுதுவது அதைக் காட்டிலும் பெரிய தப்பு என்று இந்தக் குறள் கண்டிக்கவில்லையா?

"மறப்பினும் ஒத்துக் கொளலா
கும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக்
கெடும்".

என்பது ஒரு குறள். இது, பார்ப்பான் என்றால், அவன் எவ்வளவுதான் கொலை பாதகனாய் இருந்தாலும், தாய் என்றும் தங்கை என்றும் வித்தியாசம் பார்க்காத பெரிய காமாந்தகாரனாய் இருந்தாலும், அவன் பிறந்த பிறப்பினாலேயே உயர்ந்தவனாவான், பூதேவன் அவனே, அவனையே மக்கள் பூஜிக்க வேண்டும் என்கிற கருத்தைப், பார்ப்பனர்கள்-பார்ப்பன ரிஷி சிரேஷ்டர்கள் பரப்பியதினால் அல்லவா, அதை மறுத்து, கடவுள் முகத்தில் பிறந்தவன் என்று சொல்லப்படுகிற பார்ப்பனாயிருந்தாலும், ஒழுக்கங்கெட்டுவிட்டால் அவன் இழிமகன்தான். மனிதனுக்கு ஒழுக்கம்தான் முக்கியமே தவிர, பிறப்பு—ஜாதி முக்கியமல்ல என்றுதானே இந்தக் குறள் வற்புறுத்துகிறது.

அவர்களுடைய கொள்கை, வேள்வி—யாகம் செய்யவேண்டும் என்பதாகும். அதுமட்டுமல்ல, யாக வேள்வியைச் செய்யாதவர்கள், வெறுக்கிறவர்கள், கண்டிக்கிறவர்கள் எல்லாம் சூத்திரர்கள்—சண்டாளர்கள்—நாத்திகர்கள் என்று எழுதிவைத்திருக்கிறார்கள். அந்த யாக வேள்வியைப்பற்றி வள்ளுவர் என்ன சொல்லுகிறார்?

"அவி சொரிந்து ஆயிரம் வேட்ட
லின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை
நன்று"

என்று சொல்லுகிறார். இந்த ஒரு குறளே, இது கண்டன நூல் என்பதைத் தெளிவாக்கவில்லையா? மற்றும் அதைக் கண்டன நூல் என்று மாத்திரமல்லாமல் ஒரு மாபெரும் பகுத்தறிவு நூல் என்றும் கருதவேண்டியிருக்கிறது.

கண்டனநூல் என்றால், எதைக் கண்டிக்கும் கண்டன நூல் என்று பார்ப்போமானால், ஆரியத்தை—ஆரியப் பண்பை, அதிலுள்ள உண்மை ஒழுக்கத்துக்கும், பகுத்தறிவுக்கும் ஏற்காத ஆபாச மூடப் பழக்கவழக்கங்களைக் கண்டிக்கும் கண்டன நூல் என்றே எண்ணலாம். மற்றும் பல மதவாதிகளின் கற்பனைகளை அதாவது பகுத்தறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் நிற்காததும், வெறும் நம்பிக்கை—நம்பி ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்தினால் மாத்திரமே நிற்பதாகிய பல மூடநம்பிக்கைகளை ஒழித்து, மக்களுக்கு இயற்கைத் தன்மை விளங்கும்படி செய்வதாகிய பகுத்தறிவு நூல் என்றே சொல்லலாம்.

இந்தப்படி சொல்லுவதிலும் பெரியார் அவர்கள் தனது கட்டுரையில் ஒரு பாதுகாப்புப் பிரிவைச் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதுவும் மிகமிகக் குறிப்பிடத்தக்கதாகும். "நான் குறளின் மேம்பாட்டைப் போற்றுவதின் மூலம், குறள் முழுவதையும் ஒப்புக் கொண்டவன் என்றோ, குறளின்படி நடக்கிறவன் என்றோ யாரும் கருதிவிடாதீர்கள். எனக்கு-எங்களுக்குப் பொருந்தாத குறளுமிருக்கலாம். அதாவது எங்களால் பின்பற்ற முடியாத குறளுமிருக்கலாம். ஆனால் எனக்கு—எங்களுக்கு வேண்டியவைகள் மீதம் அதில் இருக்கின்றன. அதுபோலவே ஒழுக்கவாதிகளுக்கும், பகுத்தறிவு வாதிகளுக்கும் வேண்டியவைகள் எல்லாம் அதில் இருக்கிறது, எடுத்துக்கொள்ளுங்கள்" என்பது ஆக தெளிவுபட விளக்கி உள்ளார்.

ஏன அப்படிக் கூறியிருக்கிறார்கள் என்றால், இன்று நம் திராவிட மக்களுக்கு முக்கியமாய், முதன்மையாய், இன்றியமையாததாய் வேண்டப்படுவது ஆரிய ஆபாசமும், அறியாமையும், மூட நம்பிக்கையும் கொண்ட சாதி, மத, கடவுள்கள் தன்மையிலிருந்து வெளியேறிப் பகுத்தறிவும் தன்மானமும் பெற வேண்டியதே ஆதலால், அவற்றைப் பொறுத்தவரை பெரியாரவர்களும் திராவிடக்கழகமும் கருதும்-கூறும் விஷயங்களுக்கு நல்ல உறுதியான ஆதாரங்கள் அதில்-குறளில் இருக்கின்றன என்ற உறுதியால் அப்படிக் கூறிஇருக்கிறார்கள். அதாவது ஒரு பாதுகாப்புக் குறிப்புக் கூறி இருக்கிறார்கள். ஏன்? அப்பாதுகாப்பு என்றால்,

குறளின் காலம் இன்றைக்குச் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தியதாகலாம். அப்படி இருக்குமானால் 2000 ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட பல அற உரைகள் பற்றிய நீதிகள், சமுதாய முறையான ஒழுக்கங்கள், அக்காலத்தில் நாட்டில் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கருத்துக்கள் யாவும், இன்றும் பொருத்தமானதாகவும் மதிக்கத் தகுந்ததாகவும் இருக்கும் என்று சொல்லுவது இயற்கைக்குப் பொருந்தாததாகும். ஆதலால் அவற்றுள் சில இன்றைய நிலைக்கு-கருத்துக்கு-மக்களின் ஆசாபாசத்துக்கு—சுற்றுச் சார்புக்கு ஏற்ற வண்ணம் அமைத்துக்கொள்ள வேண்டியது அறிவுடைமையாகும்.

உதாரணமாகத் தனி உடைமை உரிமை உள்ள காலத்தில், ஒருவனின் உடைமையை அவன் சம்மதமின்றி எடுப்பது திருட்டு ஆகும் என்பது ஒழுக்கவிதியாகும். அதே ஒழுக்கவிதி, தனி உடைமை உரிமை இல்லாத காலத்தில், ஒருவன் தனக்கென்று அதிக உடைமை எடுத்து வைத்துக்கொள்ளுவானானால் அதை பலாத்காரமாகப் பறிக்காதது ஒழுக்கத்துக்குக் கேடாகும் அல்லவா? இப்படியாக மற்றும் பல படியாக காலத்துக்கு-நிலைமைக்கு ஏற்ப பல மாறுதல் இயற்கையாக அமைக்கப்பட வேண்டியதும் அனுசரிக்கப்பட வேண்டியதும் இயல்பாகும்.

குறள், ஆரியத்தை-ஆரியப்பண்பு முதலியவற்றைக் கண்டிக்கும் கண்டன நூல் என்று எதனால் சொல்லப்பட்டது? என்பதைச் சிந்திப்போம் ஆரியத்துக்கும் ஆரியப் பண்புக்கும் அடிப்படை முதலாவது மூட நம்பிக்கை பிறகு, அதன் மீது ஆரியர்களின் சுயநலத்துக்கு ஆகக் கற்பனை செய்துகொண்ட மதம், கடவுள்கள், ஜாதிகள், மேல் உலகம், கீழ் உலகம், நரகம், மோட்சம், தலைவிதி, முன் ஜன்மம், பின் ஜன்மம், இவைகளைப் பிரசாரம் செய்ய அவர்களால் உண்டாக்கப்பட்ட கடவுள்கள்-வேத-சாஸ்திர—புராண—இதிகாசங்கள் முதலியவைகளும், இவைகளை ஆதாரமாய்க் கொண்ட நாள்கள், பண்டிகைகள், உற்சவங்கள், பழக்க வழக்கங்கள் முதலிய கொண்டாட்டங்களும் ஆகும்.

குறள் இவைகளை எல்லாம் பெரிதும் கண்டித்தும், மறுத்தும், கிண்டல் செய்தும், அலட்சியப் படுத்தியும் வருகிறது. இந்தப்படி கண்டித்து மறுத்து அலட்சியப் படுத்தி, கிண்டல் செய்துவருவதற்கு ஆதாரமாகக் குறளில் பல குறள்கள் இருக்கின்றன.

முதலாவதாக தலைவிதியையும், கடவுளின் சர்வ சக்தியையும் குறள் மறுக்கின்றது என்பதற்குஒரு எடுத்துக்காட்டே மிக, மிகப் போதுமானதென்போம். அது என்னவெனில்

“இரந்தும்உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகுஇயற்றியான்” என்று கூறுகிறது.

இதில் இரண்டு உண்மைகள் இருக்கின்றன. 1. ஒரு மனிதன் இரந்து-பிச்சை எடுத்துக் கீழ்மைப் பட்டுஉயிர் வாழ்வதற்குக் காரணம் அவன் தலைவிதி அல்லஎன்பது. 2. உலகத்தைச் சிருட்டித்தது அதாவது உலகில் உள்ள நலத்துக்கும் கேட்டிற்கும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் கடவுள் காரணமல்ல; கடவுள் சக்தி-ஆக்கல் அவற்றிற்கு பொறுப்பல்ல என்பது.

இரண்டாவதாக, தேவர்கள் என்பதாக யாரும் இல்லை என்பதும், ஆரியர்களால் கற்பிக்கப்பட்டிருக்கும் தேவர்கள் என்பவர்களுக்கு அயோக்கியத்தனங்கள் தான் கற்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதும் விளங்க, ஒருதக்கமான எடுத்துக்காட்டு குறளில் விளங்குகிறது. அது என்னவெனில்,

தேவரனையர் கயவர் அவரும் தாம்
மேவன செய்தொழுகலான்.

என்று கூறுகிறது.

இது எவ்வளவு பொருத்தமானதும், சரியானதும் என்பதை ஆரியக்கடவுள்கள், தேவர்கள், ரிஷிகள், தேவர்கோன்முதலியவர்களைப்பற்றிய சாஸ்திர புராண இதிகாசங்களைப் பார்த்தவர்களுக்கு நன்றாய் விளங்கும். தேவர்கள் என்பதில், குறள்எல்லாத் தேவர்களையும், தேவர்கோன் உள்பட சேர்த்தே, பல இடங்களில் அவர்களை இழிவுப் படுத்திக் கூறுகிறது.

மற்றும்உலக நடப்புக்கு—வாழ்வுக்கு கடவுள் காரணமல்ல, இயற்கை நடப்புதான் காரணம் என்பதைக்காட்ட குறளில் பல எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. எவை எனில்,

வானின்றுலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.

மழையால்தான் உலகம் வாழ்கின்றது—காப்பாற்றப்படுகின்றது-ஜீவராசிகளுக்கு உணவு அளிக்கப்படுகின்றது என்பதற்கும், மற்றும் மழையால்தான் கடவுள் காரியங்களும்மனிதர் தர்மங்களும் (கடமைகளும் அறமும்) நடைபெறுகின்றன என்பதற்கும் குறளில் பல ஆதாரமாய் விளங்குகின்றன. அதாவது

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

என்றும்,

தானம் தவம் இரண்டும் (கூட) தங்கா
வியனுலகம் வானம் வழங்கா தெனின்

மழை இல்லாவிட்டால் கடவுளுக்கு பூசனையும் தேவர்களுக்குப் படைப்பும் கிடையாது. மக்களிடமும், ஒழுக்கம் கடமை ஒன்றுமே இருக்க முடியாது என்றும் தெளிவுறுத்துகிறது.

மக்களில், பிறப்பில் சாதி இல்லை, உயர்வு தாழ்வு இல்லை என்பதையும், தொழிலாலும் உயர்வு தாழ்வு இல்லை என்பதையும் குறள் நன்றாய் வலியுறுத்துகிறது. எடுத்துக்காட்டாக,

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்—சிறப்பு (ம்) ஒவ்வாது செய் தொழில் வேற்றுமையான்” (ஆம்)

“மக்கள் பிறவியில் யாவரும் சமம், தொழிலிலும் அதாவது மக்களுக்கு ஆக யார் எத்தொழிலைச் செய்தாலும் அதிலும் யாவரும்

சமமே யாவர் என்கின்றது.

தெய்வ எத்தனம் என்பது பயனற்றது, மனித எத்தனம்தான் உண்மை என்பதற்கும் எடுத்துக்காட்டு குறளில் இருக்கிறது. "தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்"

எல்லாக் காரியங்களும் தெய்வத்தால்தான் ஆகிறது என்று சொல்லப்பட்டாலும், உண்மை நடப்பு என்னவென்றால், மனிதனது முயற்சியும் செய்கையும் இருந்தால்தான் பயன் உண்டாகும் என்கிறது.

மனிதனின் நடப்புக்கு—குணங்களுக்கு அவனவன் சரீர அமைப்புதான் முக்கிய காரணமே ஒழிய விதியோ, முன் ஜன்ம கர்மபலனோ என்பது அல்ல என்பதைக் குறளில் "ஊழ்" என்பது விளக்குகிறது.

ஊழ் என்பதை, குறள், சரீர அமைப்பு இயற்கைக் குணம், பிறவிக்குணம், ஜன்மக்குணம் என்பதாகக் கொள்ளாமல், முன்ஜன்மத்தில் அச்சிவன் செய்தகர்மத்திற்கு ஏற்ற விதி என்றும், அது தவறாமல் நடந்தே தீரும் என்றும் குறள் ஆசிரியர் கருதி இருப்பாரானால், அவர் இக்குறளில் இந்த ஊழ் என்ற ஒரு அதிகாரத்தை (அதாவது இந்த ஒரு 10. பாட்டை) மட்டும் பாடி விட்டுப் பேசாமல் தனது கடமையை முடித்துக் கொண்டு இருப்பார். அன்றியும் இந்தப் பத்துக் குறளைக்கூட இவர் பாடி இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏன் எனில் இவருக்கு முன்பதாகவே தலைவிதியையும், முன்ஜன்மத்தையும், கர்ம பலனையும்பற்றி ஏராளமாக, வண்டி வண்டி வண்டியாக ஆரியரால் எழுதப்பட்ட நூல்கள் இருக்கும் போது இவர்—மற்ற துறைகளில் ஆரியத்தை மறுத்து ஆரியர் பண்புகளைக் கண்டித்துக் கூறிய இவர், பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருந்தாத இதைப்பற்றி எழுதவேண்டிய அவசியம் என்ன என்பதைச் சிந்தித்தால் விளங்காமல் போகாது.

அன்றியும் தலைவிதி, முன் ஜன்மக் கர்மபலன்களின்படியேதான் மனித வாழ்வின் சம்பவங்கள் என்பதும், அவை வேறு எந்தக் காரணங்கொண்டும் மாற்றமில்லாதது என்பதும் முடிவானால், மற்ற நீதிகள், வழிபடுதல், வழிமுறைகள், கற்பித்தல்கள், மனித அறிவுப் பெருமை, சுதந்தரம் முதலியவைகள் பற்றிக் கூறுவது பயனிலவேயாகும். ஆதலால் ஊழுக்கு, விதி, முன்ஜன்மக் கர்மபலன் என்று கருத்துக் கொள்ளுகிறவர்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருந்து பொருள் கொள்ள வேண்டியவர்களாகிறார்கள்.

இவை போலவே குறளில் ஆரியத்திற்கும் மூடநம்பிக்கைக்கும் எதிராக அறிவூட்டித் தெளிவுபடுத்தும் கருத்துக்கள் ஏராளமாக இருப்பதால், பெரியார் அவர்கள் குறளைத் திராவிட மக்களுக்கு எடுத்துக்காட்டி வழிபட வைக்கிறார். குறளில் பல முரண்பாடுகள் இருப்பதாக மதப் பண்டிதர்கள், மதவாதிகள், ஆரிய தாசர்கள் கூறக் கூடும். அதுபற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. நமக்கு ஒப்பானவைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. நடப்புக்குத் தேவையானவைகளையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ளுவோம். நம்பிக்கைக்குத் தேவையானவைகளுக்கு, நம் பகுத்தறிவால் நிறுத்து ஆராய்ச்சி அனுபவ, உரை கல்லில் உரைத்துப்பார்த்துக் கொள்முதல் செய்வோம்.

குறள் வாழ்க!

---

## சுயராஜ்ஜியம்!

அன்னிய ஆட்சியில் சட்டசபை மெம்பர்களுக்கு, படி தவிர சம்பளம் என்ற பேரால் ஊதியம் இல்லை.

சுயராஜ்ஜியத்தில் சட்டசபை மெம்பர்களுக்கு ஊதியம் தந்து, அவர்களை அடிமையாக்கி ஓட்டு வாங்கி, சர்வாதிகாரம் நடக்கிறது.

* *

அன்னிய ஆட்சியில் பட்டம் பதவி கொடுத்து சர்க்காருக்கு நண்பர்களைச் சேர்த்தார்கள். அவர்கள் பெரிதும் ரயிட் ஆனரபில் சீனிவாச சாஸ்திரி, சர் கோபாலசாமி அய்யங்கார், சர் தேசிகாச்சாரி, சர் மாதவராவ் என்பவை போல், சற்று மரியாதையும் பெருமையும் ஒரு அளவுக்காவது திறமையும் உள்ளவர்களாக நண்பர்களை, சர்க்காரைத் தாங்குபவர்களை, நண்பர்களாக ஆக்கிக்கொண்டார்கள். சுயராஜ்ஜிய சுதந்தரம் வந்தபிறகு, ஓண்ணாம் நெம்பர் காலிகளுக்கு, கண்ணைக் குத்தினவனுக்கு, காலை வெட்டினவனுக்கு, நெருப்பு வைத்தவனுக்கு, வீதியில் நடக்க நடக்க வெட்டினவனுக்கு, சிறிதும் மான மரியாதையின்றி, சர்க்காருக்குப் புத்தி சொல்லுகிறவர்களைக் காலித்தனமாய் வைது, கலகம் குழப்பம் உண்டாக்குகிறவர்களுக்குப் பூமி கொடுத்து, லைசென்சு கொடுத்து, பெர்மிட் கொடுத்து, உத்தியோகம் கொடுத்து பதவி கொடுத்து 1000, 1000, என்பதாக சன்மானம் (கூலி) கொடுத்து நண்பர்களாகக் கொண்டு, அவர்கள் மூலம் தங்கள் அநீதி ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள நடவடிக்கை நடத்தப்படுகிறது.

ஆனால் குறள் சொல்லுகிறது,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரிலானும் கெடும்"

பார்ப்போம் குறள் மொழியின் உண்மையை. பொறுத்திருந்து மாத்திரம் அல்ல, பல துன்பத்தையும் தொல்லையையும் அனுபவித்துக்கொண்டு இருந்து.

---

## "நம்ம ராஜ்ஜியம்" என்னும் காங்கரஸ் ஆட்சி.

காங்கரஸ்காரர்கள் பதவி ஏற்றபின் போட்ட-உயர்த்தின வரிகள் எத்தனை? எவ்வளவு?

ஸ்டாம்புவரி, பத்திரவரி, மோட்டார்வரி, பெட்ரோல்வரி! காலன் 15 அணாவாக இருந்தபெட்ரோல் எண்ணெய் இன்றுவரியின்பயனாய் 2—8—0 ஆகி இருக்கிறது.

சினிமா வரி, புகையிலை வரி இவற்றை ஜஸ்டிஸ்கட்சியார் போட்டபோது காங்கரஸ்காரர்கள் பழி சுமத்திப் பிரசாரம் செய்தார்கள். விற்பனைவரி, எலெக்டரிக் வரி! வர்த்தகர்களுக்கு 100-க்கு 25 வீதம் லாபம் வைத்து விற்க வேண்டும் என்று திட்டம் செய்து அந்த லாபத்தில் பகுதிக்குமேல் இன்கம்டாக்சாகப் பெறும்வரி!

இவைதவிர இந்த ஆகஸ்ட்டு சுதந்திரத்திற்குப்பின் இன்னும் அதிகமாகப் பல வரிகள்! (அவை பின்னால் விளக்குவாம்.)

## காங்கரஸ் நிர்வாக சிக்கனம்.

யுத்த நெருக்கடியும், யுத்தப்பஞ்சமும், அன்னிய ஆட்சியும் இருக்

## அகிலத்தோரே! எங்கள் அணுக்குண்டின் பெருஞ் சக்தி பாரீர்.

1. அணுக்குண்டு சக்தியினைப் பெரிதாய் எண்ணும்
அயல்நாட்டு விஞ்ஞானத் தோழரே! கேளும்.
பணம் செலவு மெய்வருத்தம் ஏது மின்றிப்
பார்ப்பனர்கள் எம்நாட்டில் ஒன்று கூடி
முணுமுணுத்தால் போதும்; எழும்சக்தி, அந்த
முழக்கமோ தவளையின் ஓர் கத்த லோக்கும்
கணத்தினிலே இராமபக்தன் அநுமான் உங்கள்
காலினியைப் பெயர்த்துவந்து சேர்ப்பா னிங்கு.

2. மந்திரத்தைச் செபித்து வருணா ஸ்திரத்தை
வானத்தை நோக்கியவர் விட்டா ரானால்
சிந்து, யமுனை, கங்கை பெருக்கெடுத்துக்
கரையுடைத்துத் தீமையினைச் செய்யும் அன்றோ?
இந்தவகை அக்கினி யாஸ்திரம் விடுத்தால்
எதிரியெலால் தீப்பற்றி மாய்ந்தே போவார்
புந்தியின்றி உங்கள்போல் பொருளைக் கொட்டோம்
புதியமுறை விஞ்ஞானத் துறையும் வேண்டோம்.

3. பொங்கல், புளியோதரைகள் உண்டு நாளும்
போகத்தில் புரளுகின்ற கடவுள் கோடி
அங்கங்கும் வேவு பார்த்திருக்கும்; எங்கள்
அழகுமிகர் தாய்நாடாம் இந்தி யாவில்
மங்காத பூதேவர் துளசிதன்னை
மந்தரித்தே அரண்கட்டி விட்டா ரானால்
எங்கிருந் தணுக்குண்டை எறிந்திட்டாலும்
இடர்நேரா; அரண்கண்டு பொடியாய்ப் போகும்.

4. எண்ணற்ற அரும்முறைகள் நீங்கள் காண
இனியதோர் வாய்ப்பளித்தார் நேருசர்க்கார்
அண்மையிலே ஆங்கி லத்தில்மொழி பெயர்த்தே
அனுப்பிவைப்பார் இராமபிரான் காதை; கண்டு
புண்ணாகும் உங்களுளம் படித்த பின்பு
பொய்யென்று நினைத்திழுக்குச் சொல்லாதீர்கள்
கண்கள்தமை அவித்திடுவான் சினந்து ராமன்
கதையல்ல; எச்சரிக்கை, விடுத்தோம் முன்பே.

பதுவை, வ. போனனம்பலம்.

கரூர் தாலூக்கா 6-வது

## திராவிடர் கழக
# மாநாடு

1-5-49ல்

தோழர் எஸ். குருசாமி
தலைமையில் நடைபெறும்.

தோழர் என். ஜீவரத்தினம்
கோடியேற்றுவார்.

மத்திய திராவிடர் கழகத் தலைவர்
T. P. வேதாசலம்
மாநாட்டுத் திறப்புரையாற்றுவார்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள்
நாட்டுப் படத்தைத் திறந்துவைப்பார்.

இரவு
தோழர் A. V. P. ஆசைத்தம்பி
தலைமையில்
நடிகவேள் M. R. ராதா
குழுவினரால்
"தியாகி"—"நல்ல தீர்ப்பு" ஆகிய
இரு நாடகங்கள் நடைபெறும்.

---

கும்போது 3 அட்வைசர்கள் பார்த்து வந்த சென்னை மாகாண அரசாங்கத்தை நிர்வகிக்க இன்று சுதந்தர சுயராஜ்ஜியத்தில் 14 மந்திரிகள், 14 மந்திரி காரியதரிசிகள் இருக்க வேண்டியதாகி இருந்தாலும், வருஷம் ஒரு முறை மந்திரிகள் மாறுதலும், நிர்வாகப் போக்கு மாறுதலும் நடைபெற வேண்டி இருக்கிறது.

யுத்த காலத்தில் சர்க்கார் யுத்த முயற்சிக்கு கேடும், துரோகமும் செய்து வந்தமக்களைக்கூட, அன்னிய ஆட்சி என்பது கொடுமையான அடக்குமுறையால் ஒழிக்காமல், அவைகளுக்கு மாறாகப் பிரசாரத்தின்மூலமே மக்களுக்கு நல்லறிவுறுத்தி, ஆட்சி, அதுவும் நல்லாட்சி நடத்திவந்திருக்க; இன்றைய சுயராஜ்ஜிய சுதந்தர ஆட்சி காலத்தில்சர்க்காருக்குத் துரோகம் செய்யாமலும், ஆட்சி இயந்திரத்திற்குக் கேடு இல்லாமலும், பலாத்காரமும், நாசவேலையும், சமாதானக் கேடும் இல்லாமலும், மக்களிடம் பிரசாரம் மூலம் அறிவு வளரச்செய்யும் ஸ்தாபனங்களைப் பலாத்காரத்தின் மூலமாய், புதிய முறை அட்டூழியத்தின் மூலமாய், காலிகளுக்குக் காலித்தனம் பலாத்காரம் நாசவேலைகள் செய்ய அனுமதிப்பதின் மூலமாய் நசுக்கி ஒழிப்பது என்பது ராமராஜ்ய முறையாக இருந்துவருகிறது.

---

## இது உண்மையா?

சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வருவாயில்லாத ஒரு அய்யங்காரை நீதிபதியாக்க காமராஜர் துணைகொண்டு முயற்சி நடக்கிறதென்பது உண்மையா?

* *

டாக்டர் சுப்பராயனுக்கு மந்திரி பதவி எப்படியும் காமராஜர் வாங்கித்தருவதாய் ஒப்பந்தம் செய்திருப்பதென்பதுண்மையா?

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வந்நிலத்திற்குரிய மக்களும் கருப்பொருள்களே யாவர்.

1. தெய்வம்.

கருப் பொருள்களிலொன்றான தெய்வத்தைப்பற்றிய ஆராய்ச்சி இன்றியமையாத தொன்றாகும். முல்லைக்கு மாயோனும், குறிஞ்சிக்குச் சேயோனும், மருதத்திற்கு வேந்தனும், நெய்தற்கு வருணனும் தெய்வங்களாவர். காடும், மலையுமாகிய முல்லையும், குறிஞ்சியும் வேனிற்காலத்தில் வளம்பிரிந்து (வறண்டு) தோன்றும் நிலையே பாலையாதலால், பாலைக்குத் தனியாக நிலமில்லை. எனவே, முல்லை, குறிஞ்சித் தெய்வங்களே பாலைக்கும் தெய்வமாகும்.

புறத்திணையியல். 26-வது சூத்திரத்தில் வான், நீத்தார், அறம், ஆக்கள், (மாடு) அரசன், உலகு என்னும் ஆறையும் வாழ்த்துதல் அறுமுறை வாழ்த்து, அதாவது அறுவகைத் தெய்வ வாழ்த்து எனக் கூறுகிறார். இவை யாறும் நன்மை பயப்பனவும், சிறந்தனவும் ஆகக்கொண்டு வாழ்த்துவனவேயன்றி, வேண்டியவற்றைக் கொடுக்கவும், ஆக்கிக் காத்து அழிக்கவும் வல்லன எனக் கொண்டு வாழ்த்துவன வல்ல. அவ்வாறையும் நன்மை பயத்தலும், சிறப்புடைமையும்பற்றி வாழ்த்துதலானும், 'வாழ்த்தல்' என்பதற்கு 'நீடுவாழ்க' என்பதே பொருளாகலானும், கருப்பொருள்களுள் ஒன்றான தெய்வம் என்பது நன்மைபயப்பதும், சிறப்புடையதுமானதே என்பது வெளிப்படை. இத் தெய்வத்தைப் புணர்தல் முதலிய உரிப்பொருட்குக் கருவியாகக் கொள்ளும் கருப்பொருள்களுள் ஒன்றாகக் கூறியிருத்தலே இதனை வலியுறுத்தும்.

புணர்தல் முதலிய உரிப் பொருள்களைச் சிறப்பித்துப் பாடும் அகப்பாட்டுக்களில், அவ்வுரிப் பொருள்கள் நன்கு விளங்கும் பொருட்டு, அவ்வுரிப் பொருட்குத் துணையாக அவை நிகழும் நிலம், பொழுதுகளாகிய முதற் பொருள்களையும், உணவு, புள், மரம் முதலிய கருப்பொருள்களையும் அமைத்துப் பாடுதல் போல, அந்த அந்த நில மக்கள் தத்தம் நிலத் தலைவர்களை வாழ்த்தி வணங்குவதாகப் பாடுதலும் உரிப்பொருளறிவுக்கு ஏற்றதேயாகும். கருப்பொருள்களில் ஒன்றான தெய்வத்தைக் கருப்பொருள் கூறுமிடத்துக் கூறாது, ஆசிரியர் நில முதற்பொருளோடு கூறியிருத்தலே இதனை வலியுறுத்தும். எனவே, மாயோன் முதலிய நால்வரும் பழந்தமிழரசர்களேயாவர்.

மக்கள் முதலில் மலைகளில் தங்கிக் காய்கனிகளையுண்டு வாழ்ந்துவந்தனர்; பின்னர்க் காடுகளுக்குவந்து ஆடு மாடுகள் வளர்த்தும், புன்செய்த் தவசங்கள் விளைவித்தும் வாழ்ந்துவந்தனர்; நாளடைவில் வயல் உண்டாக்கி நெல் முதலியன விளைவித்து வாழ்ந்துவந்தனர்; முடிவில் கடலில் மீன் பிடித்தும், கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்து பொருளீட்டியும் வாழ்ந்து வந்தனர் என்பதே மாந்தர் நூல் வல்லார் கொள்கை. அலைகடலின் பெருக்கைக்கண்ட அச்சத்தினாலேயே முதலில் உயர்ந்தமலையில் தங்கிப், பின்னர் நாளடைவில் அச்சம் நீங்கிப் படிப்படியாய்க் கீழிறங்கி வந்து முடிவில் கடல் கடக்கவும் துணிந்தனர். இப்போது வான வெளியிலும் பறக்கின்றோம்.

மக்கள் மலைகளில் தங்கி வாழ்ந்துவந்தபோது, மலையிலுள்ள மூங்கில் ஒன்றோடொன்று உராய்ந்து தேய்வதனால் தீ உண்டாவதைக் கண்டு தாங்களும் தீக்கடை கோல் செய்து கடைந்து தீயுண்டாக்கினர். பின்னர்க் கல்லைச் செதுக்கும்போது தீயுண்டாவதைக் கண்டு சக்கி முக்கிக் கற்களைக்கொண்டு தீயுண்டாக்கினர். மரமும், கல்லும் ஒன்றோடொன்று தேய்வதனால் உண்டானதால் தீக்குத் தேய் என்று பெயர் வைத்தனர். நாளடைவில் அது தேய், தே, தீ என மருவியது, தேன், தே, தீ, தீ+பால் தீம்பால் என்பதுபோல.

தெய்வவணக்கம் அச்சத்தினாலும், நன்மை பயத்தலினாலுமே ஏற்பட்டதென்பது அறிஞர் முடிவு. முதலில் மூங்கிலில் தோன்றிய தீ, அம்மலை வாணருக்கு அச்சத்தை யுண்டாக்கியதாலும், பின்னர் அது உணவு சமைக்கப் பயன் பட்டதாலும் அவர்கள் அத் தீயை வாழ்த்தி வணங்கி வந்தனர். மாந்தர் முதலில் வணங்கியது தீ வணக்கமே யாகும்

தேய்: தேய்+உ—தேய்வு, தேவு. தேய்வு—தெய்வு. தெய்வு+அம்—தெய்வம். தேவு×அன் தேவன். தேவு+இ — தேவி. எனவே, தெய்வம் என்னும் சொல், தேய் என்னும் சொல்லிலிருந்து பிறந்த தனித்தமிழ்ச் சொல்லே யாகும்.

மக்களால் முதல் முதல் வணங்கப்பட்ட தெய்வம் தீ யாதலால், அதன் பெயர் பிற்காலத் தெய்வங்கட்கெல்லாம் பொதுப் பெயராயது. தெய்வம்–அஞ்சத்தக்கது, நன்மை தருவது–சிறந்தது. (ஒப்பியன் மொழி நூல் பக். 237. தேவநேயர்) தீயானது பொருள்களை அழிப்பதால் அஞ்சத்தக்கது; சமையல் செய்யவும், குளிர்நீக்கவும் உதவுவதால் நன்மை தருவது. மழை, ஆறு, கடல், நிலம், விளைவு, மாடு முதலியன வெல்லாம் அச்சம், நன்மை என்னும் ஒன்றனாலேயே தெய்வங்களாக வணங்கப் பட்டு வருகின்றன.

பின்னர்த் தமக்கு வேண்டிய நன்மைகள் செய்த அரசர், வீரர், அறிஞர், பாட்டன், பாட்டி முதலிய முன்னோர்களையும், தங்காலத்தினரையும் வாழ்த்தி வணங்கி வந்தனர். இவர்களெல்லாம் தெய்வம், தேவர் எனப்பட்டனர். வீரர் வாழ்க்கைப் புறத்திணையைப்பற்றிக் கூறும்போது கூறுவாம். முன்னோர் வாழ்க்கை மணவினைக் காலத்தில் நடுவீட்டுத் தெய்வங் கும்பிடல், புடவைக்காரி கும்பிடல் என இன்றும் நாட்டுப்புறத்தமிழ்க் குடி மக்கள் கும்பிட்டு வருகின்றனர். கண்ணகி வரலாற்றால் பத்தினி வணக்கத்தை அறியலாம். காளி, மாரி முதலிய தெய்வங்கள் பழந்தமிழ்ப் பத்தினிப் பெண்டிர்களும், வீரன், கருப்பன், மாடன் முதலிய தெய்வங்கள் பழந்தமிழ் வீரர்களுமே யாவர்.

(தொடரும்)

**அடுத்த வாரம்.**

★

பெரியாரவர்களின்
கட்டுரையான
மெட்டிரியலிஸம்
அடுத்த வாரம் வெளிவரும்

[ஆ-ர்]

(4ம் பக்கத்தொடர்ச்சி)

யாருக்கு வேண்டும்? மிருகப் பிராயத்தில் உள்ளவர்கள்தான் இன்றைய நிலையில் பார்ப்பனர்களால் புகுத்தப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிற கடவுள்களை வழிபடுவார்களேயன்றிச், சிறிதேனும் அறிவுடையவர்கள் இன்றுள்ள கடவுள் தன்மையை ஒப்புக்கொள்ள முடியுமா? அதிகமான அறிவுடைய மனிதனுக்குக் கடவுள் எதற்கு ஆகவேண்டும்? அறிவில்லாத ஜீவப் பிராணிகளைத்தான், கடவுள் அறிவு வழியில் நடத்திக் காப்பாற்ற வேண்டும்? அறிவுள்ள மனித ஜீவனைக் கடவுள் ஏன் நடத்த வேண்டும்? ஜெயிலைப் பாருங்கள்! கொலை செய்தவனும் மற்றும் பெருங் கொடுங் காரியம் செய்தவனும்கூட, கடவுளை வணங்கிக் கொண்டுதான் இருக்கிறான். அதனால், அதோடு அவன் சீர்திருந்திவிடுகின்றானா? வெளியில் வந்தவுடன் ''கடவுள் செயலால் வெளிவந்தேன்'' என்று கருதியும், முன்னைவிட இரட்டிப்பு மடங்கல்லவா குற்றவாளியாகிவிடுகின்றான். கடவுள் மன்னிப்புத்தானே, மனிதனை அயோக்கியனாக்குகிறது. காரணம் என்ன? கடவுள் என்ற உருவத்தை நம்பி வாழ்வதாலேயே, அதற்குப் பூசைக் காசு தந்து பரிகாரம் செய்துகொள்ள இயலுகிறது. கடவுள் என்பது உருவமல்ல, தனி வஸ்து அல்ல என்று கொண்டு, உயர்ந்த பண்புகளைக் கடவுளாகக்-கடவுள் தன்மையாகக் கொண்டு இருந்தால், இப்படி இருக்க முடியாது. கடவுளின் அருளுக்குப் பண்புகள் அவசியமில்லாமல், பூசை—பிரார்த்தனை—படைப்பு—காசுகளே அவசியமாக்கப்பட்டதால், அது மனித சமுதாயத்துக்குப் பயன்படாமல் போயிற்று. வள்ளுவர் வகுத்த குறளில் கடவுளுக்குப்பூசை செய், பிரார்த்தனை செய், அடிமையாயிரு! என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. ஆனால் இன்னின்ன பண்புகளுக்கு ஆளாகு, இன்னின்ன பண்புகளைப் பின்பற்று! என்றே அறிவூட்டியிருக்கிறார். அதை நாம் மறந்ததினாலேயே, நம் மனித சமுதாயத்திற்குப் பாதுகாப்பும், ஒழுக்கமுமில்லாமல் போய் விட்டது. இதுவரைதான் நாம் அவ்வாறு இருந்து வந்திருந்தாலும் பகுத்தறிவு வளர்ந்து வரும் இக்காலத்திலாவது, இந்தக் கடவுள் தன்மைகளைப்பற்றி ஒரு நல்ல முடிவு செய்தாக வேண்டாமா? நாம் தான் எப்படியோ வாழ்ந்து விட்டோமென்றாலும், நமது பின் சந்ததியார்களாவது மனிதத் தன்மையுடன் வாழ வேண்டாமா? காந்தியார் கொலை செய்யப்பட்ட அன்றே, நான் கூறினேன், இனியாவது மக்களிடம் ஜாதி—மதம்—கடவுள்கள் பேரால் புகுத்தப்பட்டுள்ள மடமைகள் நீக்கப்பட்டு நல்ல பண்புகள் வளர்க்கப்பட வேண்டும் என்பதாக. காந்தியார் பேரால் இன்று கோடிக்கணக்கில் பொருள் திரட்டுபவர்கள், மனித தர்மத்துக்கு—அந்தப் பிரசாரத்துக்கு ஒரு காசளவாவது செலவு செய்கிறார்களா? செய்வார்களா?

### விதி என்று வள்ளுவர் குறிப்பிடுவது எதை?

விதி என்பதையும் வள்ளுவர் நன்றாக விளக்கிக் காட்டியிருக்கிறார். உன் அறிவைக் கொண்டு, உன் முயற்சியின்படி நட! மக்களுக்கு நன்மை செய்! அறத்தை வளர்க்க! என்று கூறியிருக்கிறாரேயன்றி, உன் விதிப்படி—கடவுள் இஷ்டப்படி நீ நட! என்பதாக எந்த இடத்திலும் கூறவே இல்லை.

குறளில் ஊழ் என்ற தலைப்புக்குப் பொருள் கூறவந்த புலவர்கள், அவரின் கருத்துக்கு மாறுபாடாகவே கூறியிருக்கின்றார்கள். மனிதனுடைய சரீர அமைப்பின் பயனாய் ஏற்படும், சில தனிப்பட்ட குணங்களுக்குத்தான், ஊழ் என்ற பெயரை அவர் கொடுத்திருக்கிறார். ஊழ் என்பது பிறவிக் குணம், இயற்கைக்குணம், மனித சுபாவத்தின் தனிப்பட்ட குணம் என்கின்ற கருத்துக்களேயாகும்.

உதாரணமாக, இரண்டுபேர் உடன் பிறந்த அண்ணன், தம்பி. ஒருவன் சாதாரணக் காரியங்களுக்குக்கூடச் சிரிப்பான். ஒருவன் பெரிய ஆச்சரியமான காரியங்களுக்குக்கூட சிரிப்பதில்லை. ஒருவன் சாதாரணக் காரியத்துக்கும் கோபிப்பான். மற்றவன் எவ்வளவு வசவைப்பெற்றாலும் கோபிப்பதேயில்லை. ஒருவனுக்குப் பனிக்கட்டியில் கால் பட்டால் ஜலதோஷம், மற்றவனுக்கு, அவன் அதிலேயே சதாயிருந்தாலும் ஒன்றும் செய்வதில்லை. ஒருவனுக்கு 40-ல் கண்பார்வை மங்கல், ஒருவனுக்கு 60-லும் வருவதில்லை, ஒருவன் சிறு தொகையையும் திருடுவான், ஒருவன் பெருந்தொகையையும் திருடுவதில்லை. ஒருவன் சிறு விஷயத்திலும் பொய் பேசுவான், ஒருவன் பெரிய விஷயத்திற்கும் பொய் பேசான். இரண்டுபேரும் உடன் பிறந்த அண்ணன், தம்பிகளாயிருந்தும்கூட ஏன் இப்பேர்ப்பட்ட வேற்றுமைகள்?

இவர்கள் இருவர் தலையிலும், இந்த இந்த மாதிரிதான் தனித்தனியாக நடக்கவேண்டும் என்று கடவுள் எழுதி விட்டாரா? அல்லது அவரவர்களின், போன ஜன்மத்தில் நடந்து கொண்ட கர்மத்தின்படி கடவுள் விதித்த விதியா? இல்லவே இல்லை. மற்றென்னவெனில் இவற்றிற்கு, அவரவர்களின் உடற் கருவிகள்—கரணங்கள் அமைந்த தன்மை—உடலமைப்பு. எதுபோல என்றால், ஒரு டன் வெண்கலத்தை உருக்கி 10-ராத்தல் வீதம் 200-மணிகளை வார்த்தெடுக்கிறோம்; பிறகு ஒவ்வொரு மணியையும் அடித்தால், அவற்றின் ஓசையில் ஒன்றுக்கொன்று வித்தியாசமிருக்கிறதே ஏன்? நாம், மணிக்காக வார்ப்படம் ஊற்றும் போது, அவைகளுக்குள் கடவுள் புகுந்து, மணிகளின் தலையில் எழுதி விட்டாரா; உனக்கு இவ்வளவு தான் ஓசை, இன்னொரு மணிக்குச் சற்று அதிக ஓசை என்று? இப்படி வேறுபட்ட ஓசைகளுக்குக் காரணம், ஒவ்வொரு மணியையும் வார்க்கும் போது இருக்கும் இயற்கை வசதிகள், வார்ப்பட அமைப்பு, காற்றுப் போக்கு, சீதோஷ்ணத் தன்மை ஆகிய இவைகள் தானே. மற்றும் ஒரு குழலை ஊதினால், அதிலுள்ள ஓட்டைகளுக்கு ஏற்ப—ஓட்டைகள் அமைப்புக்கு ஏற்ப—ஒலி (சப்தம்) ஏற்படுகிறதேயழிய, அந்த மரத்தின் பிறவியின்படி ஏற்படுகிறதா? அதுபோலவே, மனிதனுடைய உடல் அமைப்புக்கு ஏற்றபடிதான், சிலர் அனாவசியமான காரியங்களுக்கும் பொய் பேசுவதும், சிலர் உயிர் போகும் அவசியமான காரியத்துக்கும் பொய் பேசாதிருப்பதுமாய் ஒருவர்க்கொருவர் மாறுபட்டிருக்கிறார்கள்

என்றுதானே காண முடியும்?

சாதாரணமாகக் காற்றை எடுத்துக் கொள்ளுங்கள்; அது ஒரு வாழை இலையை முள்ளின் மீது படவைத்து அதை எப்படிக்கிழிக்கிறது, அதே காற்று மற்றொரு இலையை எவ்வாறு கிழியச் செய்கிறது என்பதை. அதுபோலவே மனிதனுடைய சரீரத்திலுள்ள சில மாறுபாடுகளே, அவனது சில தனிப்பட்ட குணங்களுக்குக் காரணமாகிறதேயன்றி, புறம்பான விதியோ, கடவுள் எழுதியதோ ஆன செயல் காரணம் அல்ல.

இவ்விதப் பிறவிக் குணங்களில் சிலவற்றைத் திருத்தலாம், ஆனால் பெரும்பாலானவற்றைத் திருத்த முடியாது. அவற்றைத்தான் ஊழ் என்றும், ஊழ் முந்துறும் என்றும் வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆக, இவ்வித இயற்கைக் குணங்களைக் கர்மம், முற்பிறவியின் பயன் என்பதெல்லாம் மதவாதிகளுடைய வீண் கற்பனைகளேயாகும்.

## ஏழு பிறப்பு என்பது என்ன?

இவ்விதமாகவே, பிறவியைப் பற்றியும் வள்ளுவர் வழி வகுத்துள்ளார். ஒருவனுடைய வாழ்வில் ஏற்படும் புதுப்புதுக் கருத்துகள்—குண மாற்றங்களையே பிறப்பு என்று அவர் கூறியிருக்கிறார். அதாவது பல காரணங்களால் ஒருவன் கொண்டுள்ள கருத்துக்கள் மாற்றமடையலாம். அக்கருத்து மாற்றமே மறுபிறப்பு, அதாவது வேறு பிறப்பு என்று சொல்லப்படுவதாகும். ஒருவனைப் பார்த்து நாம் "அவன் புதிய பிறவி ஆகி விட்டான்" 'புது மனிதனாகி விட்டான்' என்று நாம் சொல்லுகிறோமல்லவா, அது போல்தான்.

இத்தகைய உண்மைக் கருத்துக்களைக் கொண்டு நாம் குறளை ஆராய்ந்து பார்க்காமல், பரிமேலழகரும், அவரைப் போன்றவர்களும், மூட நம்பிக்கையுடைய புராண மத வாதிகளும் எழுதிய உரைகளைக் கொண்டு பார்த்தால், குறளின் உண்மைத் தத்துவங்களை நாம் எப்படி உணர்ந்து கொண்டுவிட முடியும்?

## சமதர்ம ஞானி வள்ளுவர்!

வள்ளுவர் அந்தக் காலத்தில் வாழ்ந்த ஒரு சமதர்ம வாதியாவார் என்றுகூடக் கூறலாம். ஏனென்றால் பொதுவுடமையின் அடிப்படையை நாம் குறளில் காண முடிகிறது.

"இரந்தும் உயிர்வாழ வேண்டின் பரந்துகெடுக உலகு இயற்றியான்" என்று ஒரு குறளில் கூறுகிறார். ஒருவன் பிச்சை எடுத்துத்தான் வாழவேண்டிய நிலையிருப்பின், அவனைப் படைத்ததாகக் கூறப்படும் படைத்தவனை ஒழி! என்று எடுத்துக்காட்டியிருக்கிறார். மக்களை—உலகத்தைப் படைத்தவன் ஒருவன் உண்டு என்றோ, அப்படி அவன் இருப்பதனாலும் மக்கள் நடத்தைக்கும், கருத்துக்கும், தன்மைக்கும், பண்புக்கும் அவனேதான் காரணமானவன் என்றோ, அவர் எங்கும் கருதினதாகவோ, நமக்குக் காட்டுவதாகவோ குறளில் சொல்லவே இல்லை. இதிலிருந்து வள்ளுவரின் கடவுள் தன்மை, எப்படிப்பட்டது என்பதை நீங்கள் அறியக்கூடும். குறளுக்கிடான பொதுவுடைமை சமதர்மக் கருத்து, வேறு எந்தத் தமிழ் நூலில், எங்கிருக்கிறது? எவ்வளவு தலைகீழ் மாறுதல்! ஆகவே ஆரியத்தை—மூட நம்பிக்கையை எதிர்த்துப் போராட, வள்ளுவரின் குறள் நமக்குக் கேடயமாக இருக்கின்றது. மேலும் வள்ளுவர், பொதுநலத் தொண்டு ஆற்றுவதின் மேன்மையை மிக மிகச் சிறப்பித்து வலியுறுத்திக் கூறுகிறார்.

குறளில், மக்களின் நல் வாழ்க்கைக்கும், நல்லாட்சிக்கும், மக்கள் பூரண மனிதத் தன்மையயடைவதற்கும் ஏற்ற வழிவகைகள் குவிந்துகிடக்கின்றன. உலகக் கேடுகள் ஒழிவதற்கும் வழிவகை குறளில் இருக்கின்றன. ஆரிய மத நூல்களில், அவர்களது கடவுள் தன்மை எனக் கூறப்படும் புராண இதிகாசங்களில் இவைகளுக்கு மாறுபாடான கருத்துக்களே மலிந்து கிடக்கின்றன. ஆதலால்தான் குறளைப் படியுங்கள்கள், ஆரிய நீதி நூல்களை—கோட்பாடுகளை அறவே விலக்குங்கள் என்று வற்புறுத்திக் கூறிவருகிறோம்.

## எனது பணிவான வேண்டுகோள்!

அவ்வாறு வற்புறுத்திவரும் நான், இன்றையப்பேரறிஞர்களைக் கேட்டுக் கொள்வதென்னவெனில், இடைக்காலத்தில் வாழ்ந்த சில புலவர்களால், குறளில் கற்பிக்கப்பட்டுள்ள கற்பனைகளை—மாறுபாடுகளை நீக்க, நீங்கள் முன்வர வேண்டும் என்பதுதான். அந்த மாசுகளை நீக்கி விட்டால், குற்ற உரை நீங்கிய குறளை, நம் மக்கள் அனைவரும் துணையாகக் கொண்டு, அவ்வழியே நடப்பார்களேயானால், குறைந்தது அய்ந்தே அய்ந்து ஆண்டுகளில் ஆரிய நீதி நூல்கள் எனப்படுபவைகளால், இந்த நாள் மக்கள் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பெரும் சீர்கேடுகள், ஒழுக்கக் குறைவுகள், காட்டுமிராண்டித்தன்மைகள் எல்லாம் அறவே ஒழிந்துபோகும் என்கிற நம்பிக்கை எனக்கு உறுதியாக உண்டு.

அந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டேதான் திராவிடர் கழகமும் தொண்டாற்றி வருகிறது. திராவிடக் கழகக் கொள்கைக்குப் பெரிதும் ஆதாரம், வள்ளுவரின் குறளிலேயேயிருப்பதனால்தான் நாங்கள் அதை நாடெங்கும் எடுத்துக்கூற முற்பட்டிருக்கிறோம். அதற்கான உதவிகளைச் செய்ய புலவர் பெருமக்கள் முன்வர வேண்டும்.

திராவிடர்களுக்கு நீதிநூல், ஒன்றே ஒன்றுதான் உண்டு. அது திருக்குறளைத் தவிரவேறில்லை என்பதாக உறுதி கொண்டு, ஆரிய மத புராண இதிகாச நூல்களாகிய ராமாயணம்—கீதை—பாரதம்—புராணம் ஆகிய வைணவ சைவ மத நூல்கள் ஆகியவைகளை அறவே ஒழித்துவிட வேண்டும்; அவற்றை நாம் மதித்தல் கூடாது என்கிற உறுதிப்பாடு, நாட்டு மக்களுக்கு உண்டாக வேண்டும்.

நம் நாட்டில் மத வெறியகன்று, சாத்திரக் குப்பைகள் தீக்கிரையாகி; கடவுள் பேரால் மக்களை மடமைக்கு இழுத்துச் செல்லும் சுயவர்களின் ஆதிக்கமும், ஏழை பணக்காரத்தன்மை, மேல்ஜாதி கீழ்ஜாதி, வர்ணாச்சிரம வைதீகப் பித்தலாட்டங்கள் ஆகிய அனைத்தும் அறவே ஒழிந்து; நம் நாட்டை அன்பும், அறிவும், ஆண்மையும், தன்மானமும கொண்டதாக ஆக்கி, மக்கள் அனைவரும் இன்ப வாழ்வு வாழ அடிகோலுவதற்கு, பொதுப்பணி ஆற்ற முற்பட்டுள்ள யாராயிருந்தாலும் கட்சி, ஜாதி, மதபேதங்களை மறந்து, வள்ளு

இங்கர்சால் சொற்பொழிவு.

# ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அவர் தோல்வியுறுவார் என்றும் கொலை செய்யப்படுவார் என்றும், அவருக்குத் தெரியுமாம். உண்மையில் அவரே எல்லாவற்றையும் தயார் செய்துகொண்டு, உலகோர் முன் தோன்றி, புனிதப்படுத்தவே இவையாவும் செய்தாராம். இவற்றையெல்லாம் நம்புபவர்கள் காப்பாற்றப்படுவாராம்; அய்யப்படுபவர்கள் அல்லது மறுப்பவர்கள் கைவிடப்படுவாராம்.

இந்தக் கடவுளுக்கு நல்ல மூளை இருக்கிறதா?

எப்போதுமிருப்பதில்லை! தன் எதிரிகளைத் தானே உற்பத்தி செய்து, தனக்கெதிராக நடக்கச் செய்கிறாராம். எதுவும் அவர் விருப்பத்திற்கு மாறாக இருப்பதோ, நடப்பதோ இல்லையாம்; ஆனால் , இன்னும் பிசாசுமட்டும் மடிந்தபாடில்லை.

இந்தக் கடவுளுக்கு என்ன நேர்ந்துவிட்டது இப்படி நடந்து கொள்ள? சரி, அவர் சில சமயம் மடையராகவும், சிலசமயம் கொடுரமானவராகவும், சிற்சில சமயம் பைத்தியமாகவும் இருக்கிறாராம்.

உண்மையில் இந்தக் கடவுள் இருக்கிறாரா? இயற்கைக்குப் புறம்பே ஏதாகினும் அறிவு இருக்கிறதா? மனிதக் குழந்தைகளிடம் இரக்கம் காட்டும் ஏதாகினும் ஒரு உயிர், தாரகை மண்டலங்களிலே இருக்கிறதா?

யாமறியோம்!

பின், இயற்கைக்கு நாம் நன்றி கூறலாமா?

இலை, புல், பூச்சியைக் காட்டினும் நம்மிடம் அதிக இரக்கம் காட்டிவிட்டதா இயற்கை?

இயற்கைக்குத் தெரியுமா நாம் உயிர்வாழ்வது? யாமறியோம்!

ஆயினும் நாமெல்லோரும் அறிவோம், இயற்கை நம்மைக்கொலை செய்யப்போவதை.

இயற்கைக்கு நாமேன் நன்றி கூறவேண்டும்? கடவுளுக்கோ அல்லது இயற்கைக்கோ, சூரிய ஒளிக்காகவும், மழைக்காகவும், சுகத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் நன்றி கூறினால், பஞ்சத்திற்கும், பரிதவிப்புக்கும், பூகம்பத்திற்கும், புயலுக்கும், நோய்க்கும், மரணத்திற்கும் யாரைக் குறைகூறுவது?

## III

### உலகாயுதம் யாது செய்துள்ளது?

அய்தீக ஆலயங்கட்கு நாம் நன்றி கூற முடியாவிட்டால்—புரியாத 'ஒன்றுக்கு' நன்றி கூற முடியாவிட்டால்—காணமுடியாத ஒன்றுக்கு—இயற்கைக்கு அப்பாற்பட்ட 'ஒன்றுக்கு' நன்றி கூற முடியாவிட்டால்; இயற்கைக்கு நன்றி கூறமுடியா விட்டால்; புரியாத ஒன்றுக்கு நாம் முழந்தாளிட்டுப் பணிய—கீழே விழுந்து வணங்கமுடியாவிட்டால், பின் நாம் யாருக்கு நன்றி கூறுவது?

'கூறமுடியாத,' 'கடவுள்,' 'புனிதம்,' 'தூய ஆவி' ஆகிய புனிதம் நிறைந்தோரைக்கூறாத, கடவுளால் நிராகரிக்கப்பட்ட, உலகாயுதம் என்ன செய்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்வோம்.

இந்துக்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், உரோமர்களுடைய கவிகளையும், தத்துவவாதிகளையும், அறிவு வல்லுனர்களையும் கடந்து, பின் இன்றைய நாகரீகக் காலத்திற்கு வருவோம்.

கி. பி. பத்தாம் நூற்றாண்டில், சாரசன்ஸ் என்ற பெரும் சாம்ராஜ்ய ஆட்சியாளர்கள் "மங்கோலியா, உடார்டரி, பாரசீகம், முசபுடோமியா, சிரியா, எகிப்து, வட ஆப்ரிக்கா, மொராக்கோ, பெஸ், ஸ்பானியம், முதலிய இடங்களிலே கல்லூரிகளை ஏற்படுத்தினார்கள்." சாரசன்ஸ் சாம்ராஜ்ய நிலபரப்பு, உரோமசாம்ராஜ்யநிலப் பரப்பினும் பெரிது. கல்லூரிகள் மட்டுமல்ல, ஆராய்ச்சிசாலைகளையும் வைத்திருந்தனர். விஞ்ஞானம் போதிக்கப்பட்டது. பத்து எண்களை அறிவித்து, அல்ஜீப்ரா, திரிகோண கணிதம், சமபின்னம், சர்வே அளப்பு முதலியவற்றை அறிந்தும், போதித்தும் வந்தனர்; கேட்டலாக், தாரகைக் கூட்டப் படம் எழுதியும், தாரகைகட்குப் பெயரிட்டும் (அந்தப் பெயர்களே இன்றுமுள்ளவை), உலகின் அளவை அறிந்தும், கிரணங்களின் காரணம், வருகை நாட்கள், ஆண்டுகளின் நீடிப்பு முதலியவைகளை கணித்துப்போதித்தும் இருக்கின்றனர். அவர்கள் கிரணங்களைக் கணித்தும், புதன், வியாழன் போன்ற கிரகங்களின் ஒப்புமைகளை நுணுகி ஆராய்ந்தும் தாரகைக் கூட்டங்களின் இரகசியங்களையும் தெரிந்துகொண்டார்கள். அவர்கள் வான மண்டல ஆராய்ச்சிக்குரிய சாதனங்களை ஏற்படுத்தினார்கள். மணிப் பொறிகளைப்பலவிதமான முறைகளில் செய்தவர்களும், மணிப்பொறியின் ஆடும் குச்சியை (Pendulam) கண்டுபிடித்தவர்களும் அவர்களேயாகும். உவர்கள் உலோக சரித்திரத்தை (Chemistry) ஆரம்பித்து, கந்தக நீர், நெருப்பு நீர், மது நீர், முதலியவைகளையும் கண்டுபிடித்தனர்.

அவர்களே முதன்முதலில் வைத்தியசாலை, வைத்திய விடுதி முதலியவைகளை அமைத்தவர்களாகும்.

இயந்திரங்களில் வீழ்ச்சிப் பொருள்களின் உண்மைகளை உணர்ந்துகொண்டார்கள். இயந்திர சக்திகளையும், பூமியின் இழுப்புச் சக்தியையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அவர்கள் பொருட்களின் மிதப்பு, இழுப்பு சக்திகளை ஓர்ந்து போதித்து இருக்கிறார்கள்.

கண் கண்ணாடிகளில், ஒளிக் கதிர்கள் கண்ணின்றும் பொருளுக்குப் போவதில்லை; பொருளி

---

வர் வகுத்தவழி நின்று தொண்டாற்ற வேண்டுமென்பதே திராவிட மக்களுக்கு எனது பணிவான வேண்டுகோள்.

திராவிடக் கழகத்தினராகிய நாங்கள் அவ்வுயரிய கருத்துக் கொண்டே குறளை நாட்டில் பரப்ப முற்பட்டுள்ளோமேயன்றி வேறில்லை.

னின்றும் கண்ணிற்கு வருகிறது என்பதைக் கண்டுபிடித்தனர்.

அவர்கள் பருத்தித் துணி, தோல், காகிதம், எஃகு முதலிய வைகளை உற்பத்தி செய்தனர். "விளையாட்டு சாயப்படங்களை யும், வழிகளையும் கற்றுக் கொடுத் தனர்." அவர்கள் காதலையும், நவீனங்களையும், பல பொருள் களைப்பற்றிய கட்டுரைகளையும் ஏற்படுத்தினார்கள்.

அவர்கள் பள்ளிகளிலே நவீன காலத்து "உள்ளது சிறத்தல்" தத் துவங்களைப் போதித்தனர். டார் வின், ஸ்பென்ஸர் முதலியோர் கொள்கைகட்கு ஆதரவு கொடுத் தனர்.

இவர்கள் கிருஸ்தவர்கள் அல்ல; பெரும்பாலும் இவர்கள் பொய் யான—பாவனை செய்யும், பொய் யான கடவுள் தூதுவரின் வழிவந் தோராவர். ஆயினும் உண்மை யான கடவுளினால் தேர்ந்தெடுக் கப்பெற்ற உண்மைக் கிருஸ்தவர் கள்—புனித ஆவியால் நிரம்பப் பெற்ற கிருஸ்தவர்கள், தங்கள் நா கிழியும் அளவு கூச்சலிட்டு, புனித—தெய்வீக தாரகையைக் கண்டுபிடிக்கின்றார்களாம். இந்த உண்மையானநம்பிக்கையாளர்கள், தத்துவ வாதிகளை வதைத்துக் கொண்டு, சிந்தனையாளர்களின் கண்களை அணைத்துக் கொண்டி ருக்கும்போது, கடவுளற்ற வழி வந்தோர்களாகிய முகமதியர்கள் கல்லூரிகளை ஏற்படுத்தி, எழுத் தோவியங்களைச் சேகரித்து, இயற்கையின் உண்மை களைக் கண்டு பிடித்துக் கொண்டு, விஞ்ஞானத்தில் கருத்துக்கொண்டு வாழ்ந்தார்கள். இப்படிப்பட்ட முகமதியர்கள், பிற்பகுதியில் விஞ் ஞானத்தின் எதிரிகளாய், கிறிஸ்த வர்களைப் போல் உண்மையாக, உண்மைத்தத்துவங்களைவெறுக்க ஆரம்பித்து விட்டார்கள். கடவு ளால் உரைக்கப்பட்டதை வைத் துள்ள யாவரும் தங்கள் முழுவன் மையோடு சிந்தனையை வெறுத் தும், உண்மைகளை மறுத்தும்—மறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உண்மையாக நாம் உணரவேண்டியது யாதெனின், முகமதுவைப் பின்பற்றுபவர்கள், அவர்கள் வழிவந்தோர்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாய் இருத் தல் வேண்டும். ஏனெனில் அவர் கள் தான் இன்றைய விஞ்ஞான காலத்திற்கே வித்தூன்றியவர்கள். உண்மையாக நாம் இன்னும் உணர வேண்டியது யாதெனின், நாம் கிறிஸ்தவ ஆலயங்கட்கு, மதத் திற்கு நன்றி கூறத்தேவையில்லை. ஏனெனில் அவைகளால் ஒரு நன் மை பயக்கும் உண்மைகளும் ஏற் பட்டதில்லை.

சிந்தனை வித்துக்களை நம் மூளைகளிலே ஊன்றியவர்கள் கிரேக்க, உரோமர்களாவர். அந்த வித்து அவர்களுடைய இலக்கியங் களினின்றும் கிடைக்கப்பெற்றது. சிந்தனையிலும், சிறப்பிலும், அழ கிலும், நேர்மையிலும், நம் மொழி யிலுள்ள சிறந்த இலக்கியம் 'பேகன்' ஆகும். (அமெரிக்க இலக்கியம்). நேர்மையாக நாம் உணரவேண்டியது; முகமதியர்கள் விஞ்ஞானத்தின் தோழர்களாக இருந்த காலத்தில், கிறிஸ்துவர்கள் அதன் எதிரிகளாய் இருந்தனர். விஞ்ஞானத்தின் தோழர்கள்—துணைத் தோழர்களுக்கு அறிவு ஞானம் புகட்டியவர்கள் இப் போது நரகத்தில் வதிவதையும்; தத்துவ வாதிகளை மறுத்தும், வெறுத்தும் கொன்றவர்கள் இப் போது மோட்சத்தில் இருப்பதை யும் எண்ணும்போது, எவ்வளவு கேவலமும், பயங்கரமுமாக இருக் கிறது என்கைஉன்னிப்பாருங்கள்! கடவுளின் நீதி இப்படிப்பட்டதே யாகும். (தொடரும்)

---

## சீர்திருத்தச்சங்கம்.

### (ஞ)

காங்கயம். 24-4-49.

23-4-49 தேதி மாலை 7-மணிக்கு காங்கயத்திற்கு அருகாமையில் உள்ள கல்வேரி (திருமலைசாமிபுதூர்) பொது மைதானத்தில் தோழர் புலவர் குழந்தை அவர்கள் தலைமையின்கீழ் "ஆலாம்பாடி கிராம சீர்திருத்த சங்கத் திறப்புவிழா" ஒன்று சிறப்பாக நடை பெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்களான கோவிந்தசாமி, பாலகுரு ஆகியோர் சொற்பொழிவாற் றினார்கள். சங்க செயலாளர் நன்றி கூற கூட்டம் 10-மணிக்கு முடிவ டைந்தது.

---

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.

## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? | 0 | 5 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க் கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத் திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப் புவோர், முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. 3-ரூபாய்க்கு உட் பட்ட ஆர்டராயிருந்தால், ஆர்ட ருக்குரிய முழுத் தொகையையும் செலவுத் தொகையையும் முதலி லேயே அனுப்பிவிடவேண்டும். 3-ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டரா யிருந்தால், நாலில் ஒரு பங்காவது முன்னால் அனுப்பிவிட வேண் டும். இப்படி முன்பணம் அனுப் பாத ஆர்டர்கள் நிச்சயமாகக் கவ னிக்கப்படமாட்டாது.

மானேஜர், குடி அரசு, ஈரோடு